பக்கங்கள் 23+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 09 வியாழக்கிழமை 25.09.2025 | அதிர்வு 56

## எஸ்.ரி.எவ். துரத்திச் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் கிணற்றில் வீழ்ந்து மரணம்

கிளிநொச்சியில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரிடமிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட 02



'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# பலஸ்தீனத்தைச் சுதந்திர நாடாக அங்கீகரிக்கின்றோம்

## ஐ.நா. பொதுச் சபை அமர்வில் ஜனாதிபதி அநுர உரை

"பலஸ்தீன நாடொன்றுக்கான பிரிக்க முடியாத உரிமையை நாங்கள் அங்கீகரிக்கின்றோம். அதே போன்று இஸ்ரேலிய மற்றும் பலஸ்தீன மக்களின் நியாயமான பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான பிரச்சினைகளை அடையாளம் காண வேண்டும்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 80 ஆவது அமர்வு நியூயோர்க் நகரில் ஐக்கிய நாடுகள் சபை தலைமையகத்தில் நடைபெற்று வருகின்றது. இந்த அமர்வில் இலங்கை நேரப்படி இன்று அதிகாலை ஜனாதிபதி உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார். 06



# கேபிள் கார் விபத்தில் ஏழு பிக்குகள் மரணம்!



## குருநாகலில் துயரம்

(க.மகாதேவன்)

குருநாகல் - மெல்சிரிபுரவின் பன்சியாகமவில் உள்ள பௌத்த வன ஆச்சிரமமான நா உயன ஆரண்ய சேனாசனத்தில் இடம்பெற்ற கேபிள் கார் விபத்தில் 7 பௌத்த பிக்குகள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று இரவு 9 மணியளவில், புனித தலத்தில் மதச் சடங்குகளை முடித்துவிட்டு 02

# வான் - லொறி மோதி கோர விபத்து நால்வர் உயிரிழப்பு; மூவர் படுகாயம்



குருநாகல் – அனுராதபுரம் பிரதான வீதியில் தலாவ – மீரிகம சந்தியில் லொறி ஒன்றும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இன்று அதிகாலை இந்தக் கோர விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனுராதபுரத்தில் இருந்து குருநாகல் நோக்கிச் சென்று கொண்டிருந்தலொறியும், குருநாகலில் இருந்து அனுராதபுரம் நோக்கிச் சென்று 02

# யாழ். மாநகர சபையில் திலீபனுக்கு அஞ்சலி!



(என்.புவியரசன்)

தமிழ் மக்களின் விடுதலைக்காக 12 நாள்கள் உண்ணாநோன்பிருந்து ஆகுதியான தியாக தீபம் திலீபனுக்கு யாழ்ப்பாணம் மாநகர சபையில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். மாநகர சபையின் சபை அமர்வு மேயர் வி.மதிவதனி தலைமையில் இன்று நடைபெற்றது. இதன்போது ஆரம்பத்திலேயே தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநகர சபை மேயர் சுடரேற்றியதைத் தொடர்ந்து சபையில் பிரசன்னமாகியிருந்த அனைத்து உறுப்பினர்களும் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினர்.

இதேநேரம் இந்த இந்த அஞ்சலி நிகழ்வில் ஈ.பி.டி.பியின் 4 உறுப்பினர்களும் சபையில் பிரசன்னமாகாது அஞ்சலி நிகழ்வு நிறைவுற்ற பின்னர் சபை அமர்வில் பங்குகொண்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**எஸ்.ரி.எவ்....**

நபர் கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி இடம்பெறுகின்றது எனப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, சந்தேகநபரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நேற்று கைது செய்யச் சென்றபோது, அவர் தப்பிச் செல்ல முற்பட்டு கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இராமநாதபுரம் பகுதியில் வசிக்கும் ஒரு பிள்ளையின் தந்தையான இளம் குடும்பஸ்தரே (வயது 24) இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக இராமநாதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**வான் - லொறி...**

கொண்டிருந்த வானும் நேருக்கு நேர் மோதியே இந்தக் கோர விபத்து இடம்பெற்றுள்ளது.

வானின் சாரதி மற்றும் லொறியின் சாரதி உட்பட ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில் தலாவ மற்றும் அனுராதபுரம் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் வானில் பயணித்த நால்வர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து தொடர்பில் தலாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





**கேபிள் கார்...**

மலை உச்சியில் உள்ள தியான மண்டபத்துக்குப் பிக்குகள் திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கேபிள் காரின் கம்பி அறுந்ததால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த பிக்குகளில் இருவர் வெளிநாட்டுப் பிரஜைகள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

.விபத்து இடம்பெற்ற நேரத்தில் 13 பிக்குகள் கேபிள் காரில் இருந்தனர் எனக் கூறப்படுகின்றது.

விபத்தின்போது கேபிள் காரில் இருந்து குதித்த இரண்டு பிக்குகள் சிறு காயங்களுடன் உயிர் தப்பினர்.

படுகாயமடைந்த 4 பிக்குகள் குருநாகல் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உயிரிழந்த பிக்குகளின் சடலங்கள் குருநாகல் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

விபத்துதொடர்பில்மேலதிகவிசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# இனப்படுகொலைக்கு நீதி வேண்டி உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பம்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத் தொடரில் வடக்கு, கிழக்கு தமிழ் உறவுகளுக்கு நிரந்தர தீர்வு வேண்டும் மற்றும் இனப்படுகொலைகளுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பவை உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் யாழ்ப்பாணம் – செம்மணிச் சந்தியில் இன்று ஆரம்பமானது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் – செம்மணிச் சந்தியில் உள்ள அணையா விளக்குத் திடலில் இன்று காலை 10 மணியளவில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்குச் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தி சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமானது.

இந்தப் போராட்டம் இரவு – பகலாகத் தொடர்ச்சியாக எதிர்வரும் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.












# தியாகி திலீபன் நினைவேந்தலின் 11ஆம் நாள் நிகழ்வு




தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தலின் 11ஆம் நாள் நிகழ்வு இன்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் – நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில், சுடரேற்றி, திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் முன்னாள் போராளிகள் மற்றும் தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் கலந்துகொண்டனர்.























# வவுனியாவில் திலீபன் நினைவேந்தி இன்று அடையாள உண்ணாவிரதம்

**(கி.வசந்தன்)**

தியாக தீபம் திலீபனின் 38ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியாவில் இன்று அடையாள உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் ஏற்பாட்டில் வவுனியா மாநகரசபை முன்றிலில் அமைந்துள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபியில் அமைக்கப்பட்ட தியாக தீபம் திலீபனின் நினைவுத் திடலில் இந்த உண்ணாவிரதப் போராட்டம் இன்று இடம்பெற்றது.

ஐந்தம்ச கோரிக்கைய முன்வைத்து தியாக தீபம் திலீபன் உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்து 38 ஆண்டுகள் கடந்த நிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலர்தூபி, தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன்,அடையாளஉண்ணாவிரதமும் மேற்கொள்ளப்பட்டது.

இதில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியினர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.













# பலஸ்தீனத்தைச் சுதந்திர நாடாக அங்கீகரிக்கின்றோம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



அவர் மேலும் உரையாற்றுகையில், ”உலக நாடுகளிடையே நீதியான மற்றும் நீடித்த அமைதியை நிலைநாட்டிப் பேணுவதை உன்னத குறிக்கோளாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த தனித்துவமான அமைப்பின் 80 ஆவது அமர்வின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட, ஐரோப்பாவின் மையப்பகுதியில் உள்ள அற்புதமான ஜெர்மனியைச் சேர்ந்த அதிமேதகு அந்தெலேனா பெயபெராக் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், உலகையே வியக்க வைக்கும் புவியியல் மற்றும் கலாசார பன்முகத்தன்மை கொண்ட நாடான கேமரூனின் முன்னாள் ஜனாதிபதி அதிமேதகு பிலிமோன் யாங் வழங்கிய தலைமைத்துவத்திற்கு இலங்கை தனது பாராட்டுகளைத் தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்கிறேன்.

அமைதியும் ஜனநாயகமும் நிறைந்த அழகிய உலகத்திற்காக எட்டு தசாப்தங்களாக தன்னை அர்ப்பணித்துள்ள ஒரு அமைப்பின் பல்தரப்புப் போக்கிற்கும் எதிர்காலத்திற்கும் திட்டங்கள் வகுக்கப்படும் இந்தச் சிறப்புச் சந்தர்ப்பத்தில் இலங்கையின்ஜனாதிபதிஎன்றமுறையில் முதல் தடவையாக இந்த கௌரவமான சபையில் உரையாற்றுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த உலகின் பல்வேறு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நீங்கள் ஒவ்வொருவரும் அந்தந்த நாட்டு மக்களின் பிரதிநிதிகள். எனது நாடான இலங்கையைப் போலவே, ஏனைய எல்லா நாட்டு மக்களாலும் எங்களிடம் ஒப்படைக்கப்பட்ட வரலாற்றுப் பொறுப்பு நம் அனைவரின் தோள்களிலும் சுமத்தப்பட்டுள்ளது. நாம் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் இந்த உலகில் எங்கேனும் வாழும் அனைவரையும் பாதிக்கிறது. அந்த முடிவுகள் மற்றும் தீர்மானங்கள் அனைத்தும் உலகின் எதிர்கால இருப்பிற்கு ஒரு தீர்க்கமான பங்களிப்பைச் செய்கின்றன.

மனித நாகரிகத்தின் தொடக்கத்தில் இருந்து எதிர்கொள்ளும் மிகக் கடுமையான துயரமாக வறுமையை அறிமுகப்படுத்தலாம். அந்தப் பாரிய பேரழிவின் விளைவாக எழுந்த பல கடுமையான பிரச்சினைகள் நம் முன் ஒரு இருண்ட துயரத்தை உருவாக்கியுள்ளன.

இந்த சிறப்பு மாநாட்டின் கவனம் அதில் குவிய வேண்டும் என்று என் மனசாட்சி உரக்கச் சொல்கிறது. பெரும்பாலும் இவை அனைத்தும் உங்கள் மனசாட்சியை ஓரளவுக்கேனும் பாதிக்கும் என்று நான் நினைக்கிறேன்.

மதிப்பிற்குரிய பிரதிநிதிகளே, வறுமை என்பது உலகின் பெரும்பாலான நாடுகளில் பல நூற்றாண்டுகளாக அனுபவித்து வரும் ஒரு தொடர்ச்சியான மற்றும் மிகவும் வேதனையான போராட்டமாக அடையாளப்படுத்தலாம். இது பல வடிவங்களில் வரும் ஒரு பயங்கரமான எதிரி, இந்த மாநாட்டில் நாங்கள் கூடியிருக்கும் தருணத்தில் கூட, நான் உட்பட இந்த ஒவ்வொரு பிரதிநிதிகளின் நாடுகளிலும் கணிசமான எண்ணிக்கையிலான குழந்தைகள் பட்டினியால் வாடுகிறார்கள். அனைத்து பிள்ளைகளுக்கும் கல்வி கற்கும் உரிமை என்பது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தால் உத்தரவாதம் அளிக்கப்பட்டு அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அடிப்படை மனித உரிமையாகும். ஆனால் உலகம் முழுவதும் இலட்சக்கணக்கான குழந்தைகள் ஏழ்மை மற்றும் வறுமை காரணமாக இந்த உரிமை மறுக்கப்படுகிறார்கள்.

தொழில்நுட்பம் நிறைந்ததாக பெருமை பேசும் உலகில், குழந்தைகள் பாடசாலைக் கல்வியை இழப்பது எவ்வளவு துரதிர்ஷ்டவசமானது? ஒவ்வொரு பாரிய தேசத்தையும் கட்டியெழுப்புவதற்கான அடித்தளம் கல்வி ஆகும். எதிர்கால உலகின் இருப்பை தீர்மானிக்கும் முக்கிய காரணியாகும். கல்வியில் முதலீடு செய்வதை உலக முன்னேற்றத்திற்கான முதலீடாக நாங்கள் கருதுகிறோம். பல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வறுமையை நிவர்த்தி செய்வதில், முன்னேற்றத்திற்கு கடன் சுமைகள் தொடர்ந்து தடையாக உள்ளன. பொதுவாக, குறைந்த வருமான நாடுகள் சுகாதாரம் அல்லது கல்வி சேவைகளை விட நிகர வட்டி செலுத்துதல்களுக்கு இரண்டு மடங்கு அதிகமான நிதியை ஒதுக்குகின்றன. பிரஜைகளாகவும் நாடுகளாகவும் நாம் கடன் பொறிகளில் சிக்கிக் கொண்டுள்ளோம். இந்த சூழ்நிலைக்கு ஒரு சாதகமான தீர்வு அவசியம். நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல், யாரையும் கைவிடாது என்றும் முதலில் பின்தங்கியவர்களை சென்றடையவும் உறுதியளிக்கிறது.

இன்று உலகம் எதிர்கொள்ளும் மிகப் பெரிய உலகளாவிய சவாலான வறுமையை ஒழிக்கும் சவாலை நிலைபெறு அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல் அடையாளம் கண்டுள்ளது. 1995 ஆம் ஆண்டு கோபன்ஹேகனில் நடைபெற்ற சமூக அபிவிருத்திக்கான உலக உச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட ஒரு முக்கியமான முடிவை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இருப்பினும், எதிர்பாராத யுத்தங்கள், அரசியல் கொந்தளிப்புகள் மற்றும் உலகமே புயலில் சிக்கிய கோவிட் தொற்றுநோய் ஆகியவை இலட்சிய நிகழ்ச்சி நிரலை சீர்குலைத்துள்ளன. எனவே, ஏழை பணக்காரர் இடைவெளி மற்றும் வறுமையை ஒரு உலகளாவிய பேரழிவாக நாம் கருத வேண்டும்.

மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கௌரவ விருந்தினர்களே, இந்த அற்புதமான உலகை சீர்குலைத்து, குழப்பும் புதிய பிரச்சனையாக போதைப்பொருள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களை அடையாளம் காண முடியும். ஐக்கிய நாடுகளின் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பான அலுவலகம் அதன் 2025 உலக போதைப்பொருள் அறிக்கையில் கூட இதை உறுதிப்படுத்தியுள்ளது. உலகளாவிய போதைப்பொருள் பிரச்சனை உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களை பாதிக்கும் ஒரு சிக்கலான சவாலாக மாறியுள்ளது. நாளுக்கு நாள், போதைப்பொருள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் உலக சந்தையை வேகமாக ஆக்கிரமித்துள்ளன. போதைப்பொருள் வர்த்தகமும் அதன் மூலம் செயல்படும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றமும் பல உலக நெருக்கடிகளுக்கு வழி வகுத்துள்ளன.

இவற்றில் ஈடுபட்டுள்ள குழுக்கள் நாடுகளை இரையாக மாற்றுகின்றன. இந்த கொள்ளைநோய் உலக சுகாதாரம், உலக ஜனநாயகம், உலக அரசியல் மற்றும் இறுதியாக உலக நல்வாழ்வுக்கு எதிரான ஒரு பெரிய போக்காக மாறியுள்ளது. இலங்கையில் இந்த பெரும் கொள்ளைநோயை ஒழிப்பதற்கான ஒரு சாத்தியமான திட்டத்தை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம், மேலும் இந்த அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான உலக

தொடர்ச்சி ▼

# பலஸ்தீனத்தைச் சுதந்திர நாடாக அங்கீகரிக்கின்றோம்

தொடர்ச்சி ▲

ளாவிய நிகழ்ச்சி நிரலை செயல்படுத்துமாறு நான் உங்களை கௌரவத்துடன் அழைக்கிறேன். இந்த கடத்தல்காரர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துதல், அத்தகைய கடத்தல்காரர்கள் தத்தமது நாடுகளுக்கு குடிபெயர்வதைத் தடுத்தல் மற்றும் இந்த போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களின் மறுவாழ்வு மையங்களை நிறுவுதல் போன்ற அநேக விடயங்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்:

கௌரவ தலைவர் அவர்களே, மதிப்புமிக்க விருந்தினர்களே, ஊழல் என்பது சமூகத்தில் பரவலான அழிவு மற்றும் சோகத்தை ஏற்படுத்தும் ஒரு நயவஞ்சக தொற்றுநோய் என்று நாங்கள் கருதுகிறோம். ஊழல் என்பது அபிவிருத்திக்கு ஒரு தடையாக இருப்பது எங்கள் நிலைப்பாடு. இது ஜனநாயகம் மற்றும் உலக நல்வாழ்வுக்கு ஒரு முக்கியமான அச்சுறுத்தல் மற்றும் வறுமைக்கு ஒரு காரணம் என்பது எமது நிலைப்பாடாகும். ஊழலுக்கு எதிரான போராட்டம் ஆபத்தானது. ஆனால் ஊழலுக்கு எதிராகப் போராடாதிருப்பது இன்னும் ஆபத்தானது என்பதை மிகுந்த மரியாதையுடன் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

1948 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பிரகடனம் உலகில் மனித சமூகத்திற்கு ஒரு பெரிய வெற்றியைக் கொண்டு வந்தது. மனித நாகரிகத்தின் பல்வேறு சாதனைகள் ஒரே இரவில் கிடைத்துவிடவில்லை. இவை அனைத்தும் மகத்தான தியாகம் மற்றும் விடாமுயற்சியின் பெறுபேறுகள். ஊழலுக்கு எதிரான போராட்டம் ஒரு கடினமான முன்னெடுப்பாகும்.ஆனால்நாம்அந்தமுன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டும். நாம் எடுக்கும் முதல் படி கடினமாக இருக்கலாம். ஆனால் நாம் தைரியமாக எடுக்கும் படி சரியானதாக இருந்தால், அதனை பின்தொடர்ந்து ஆயிரக்கணக்கான பல படிகள் எடுத்துவைக்கப்படும் என்று நான் நம்புகிறேன். தைரியமாக இருங்கள் எஞ்சிய அனைத்தும் தானாக நடக்கும் என்ற ஜவகர்லால் நேருவின் கருத்தை இத்தருணத்தில் நான் நினைவுபடுத்துகிறேன்.

நான் சுமார் 22 மில்லியன் மக்கள் தொகை கொண்ட ஒரு சிறிய, பிரகாசமான தீவை பிரதிநிதித்துவப்படுத்துகிறேன். இலங்கையின் மக்கள் தொகை மொத்த உலக மக்கள்தொகையில் சுமார் 0.3% ஆகும். நமது நாட்டின் மக்கள் தொகை அளவு மற்றும் எண்ணிக்கையின் அடிப்படையில் சிறியது என்பது உண்மைதான். ஆனால் நமது நாட்டிற்காகவும் உலகத்திற்காகவும் எதிர்கால சந்ததியினருக்காகவும் ஊழலுக்கு எதிரான போராட்டத்தை தொடங்கியுள்ளோம். ஊழலுக்கு எதிரான போராட்டம் ஒவ்வொரு நாட்டின் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று நான் முன்மொழிகிறேன்.

நீங்கள் எந்த நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தினாலும், அனைத்து பிரதிநிதிகளும் யுத்தத்தை நிராகரிப்பதில் என்னுடன் கைகோர்ப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். உலகில் யுத்தத்தை விரும்பும் எந்த தேசமும் கிடையாது. எங்காவது எப்படியாவது யுத்தமோ அல்லது மோதலோ ஏற்படும் போதெல்லாம் அது ஒரு துயரம் என்பதை நாங்கள் அறிவோம். இப்போதும் கூட, அந்த துயரத்தின் வலி உலகின் பல பகுதிகளிலும் உணரப்படுகிறது.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக யுத்தத்தின் கசப்பான அனுபவத்தை அனுபவித்த ஒரு நாடாக, அதன் அழிவை நாம் நன்கு அறிவோம். யுத்தத்தினால் உயிரிழந்த ஆயிரக்கணக்கானவர்களின் நினைவிடங்களுக்கு வரும், அவர்களின் பெற்றோர், குழந்தைகள் மற்றும் மனைவியர் எழுப்பும் வேதனையான வேண்டுகோள்களைப் பார்க்கும் எவரும், யுத்தத்தைப் பற்றி கனவு காணக்கூட தயங்குகிறார்கள். அந்த வேதனையான காட்சியை நாம் நம் இரு கண்களால் பார்த்திருக்கிறோம். மோதல்களால் ஏற்படும் துன்பங்கள் முன்னெப்போதும் இல்லாத அளவை எட்டவில்லை என்றாலும், மில்லியன் கணக்கான மக்களின் துன்பத்தை முடிவுக்குக் கொண்டுவர தவறி பெரும்பாலும் சர்வதேச சமூகம் வெறும் பார்வையாளராகவே இருந்து வருகிறது.

குழந்தைகள் மற்றும் அப்பாவி பொது மக்களின் வாழ்க்கையை ஒரு கால் பந்தாட்டமாக மாற்றுவது சந்தர்ப்பவாத அதிகார அரசியலின் துயரமாகும். மற்றவர்களின் வாழ்க்கையை தங்கள் அதிகாரத்தை அதிகரிக்க செல்வாக்கு செலுத்தவும் ஒடுக்கவும் யாருக்கும் உரிமை கிடையாது. ஆட்சியாளர்களின் பங்கு உயிர்களை அழிப்பது அன்றி, உயிர்களைப் பாதுகாப்பதாகும்.

காஸா பகுதியில் நடந்து வரும் கொடூரமான பேரழிவு எங்களுக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துகிறது. குறிப்பாக, காஸா பகுதி ஒரு வேதனையான மற்றும் சோகமான திறந்தவெளி சிறைச்சாலையாக மாறியுள்ளது. அப்பாவி குழந்தைகள் மற்றும் பொதுமக்களின் அவலக் குரல்கள் நாளாபக்கமும் கேட்கின்றன . ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய அனைத்து தரப்பினர்களின் உடன்பாட்டின் படி, இரு தரப்பினரும் உடனடியாக போர்நிறுத்தம் செய்ய வேண்டும். அனைத்து மனிதாபிமான உதவிகளையும் தடையின்றி அனுக வேண்டும். அனைத்து தரப்பினரும் பணயக்கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று நாங்கள் குரல் கொடுக்கிறோம். இந்த கொடூரமான கொலைகளை முடிவுக்குக் கொண்டுவர நாம் வலுவான அழுத்தத்தை கொடுக்க வேண்டும்.

பலஸ்தீன நாடொன்றுக்கான பிரிக்கமுடியாத உரிமையை நாங்கள் அங்கீகரிக்கிறோம். அதே போன்று இஸ்ரேலிய மற்றும் பலஸ்தீன மக்களின் நியாயமான பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான பிரச்சினைகளை அடையாளம் காண வேண்டும். 1967 எல்லைகளில் இரண்டு நாடுகள் அருகருகே இருப்பதற்கான அடிப்படையை வழங்கும் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களின்படி ஒரு நியாயமான மற்றும் நீடித்த தீர்வைத் தேடுவதில் நாம் இணைய வேண்டும். அர்த்தமற்ற போர் காரணமாக உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களின் வேதனைக்கு முன்பாக வெறும் பார்வையாளராக இருப்பதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய ஒரு முக்கியமான தருணத்தை நாம் அடைந்து விட்டோம். உலகைப் பாதிக்கும் யுத்த மோதல்களுக்கு மத மற்றும் இனவாதம் பாரதூரமான காரணிகளாக உள்ளன.

அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டு ஒரு நூற்றாண்டுகள் கடந்த பிறகும், இனவெறியின் விஷம் இன்னும் ஆங்காங்கே உள்ளது என்பதை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்த வேண்டும். தீவிரவாத மற்றும் இனவாதக் கருத்துக்கள் கொடிய தொற்றுநோய்களைப் போலவே கொடியதாக மாறிவிட்டன. இவ்வளவு முற்போக்கான உலகில் கூட, இந்த இனவெறி மற்றும் இனவாதக் கருத்துக்கள் சாம்பலுக்கு அடியில் உள்ள தீப்பொறிகள் போல இருப்பது நகைப்பிற்கும் ஆச்சரியத்திற்கும் உரிய விடயமாகும். மிகவும் பயங்கரமான சூழ்நிலை என்னவென்றால், அந்த தீப்பொறிகள் அவ்வப்போது, சந்தர்ப்பவாதமாக, பிரபஞ்சத்தின் நல்வாழ்வுக்கு எதிராக பெரும் தீப்பிழம்பாக மாற்றப்படுகின்றன.

ஆயுதங்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, மனித நாகரிகத்தின் மதிப்புகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனுக்குள் நாம் பிரவேசிக்க வேண்டும். மில்லியன் கணக்கான குழந்தைகள் பசியால் இறக்கும் உலகில், நாம் பில்லியன் கணக்கான பணத்தை ஆயுதங்களுக்காக செலவிடுகிறோம். சரியான சுகாதார வசதிகள் இல்லாமல் மில்லியன் கணக்கான மக்கள் மரணத்தின் பாதையைத் தேர்ந்தெடுக்கும் போது, அர்த்தமற்ற போர்களுக்கு பில்லியன்களை செலவிடுகிறோம்.

இலட்சக்கணக்கான குழந்தைகள் கல்வி எனும் சிறகுகள் கிடைக்காமல் பெருமூச்சு விடும்போது, நாம் மில்லியன் கணக்கில் நில ஆக்கிரமிப்புகளுக்கு செலவிடுகிறோம். உண்மையில், இந்த உலகில் உள்ள ஒவ்வொரு அங்குல நிலத்தையும் அமைதி எனும் குடியேற்றமாக

தொடர்ச்சி ▼

# பலஸ்தீனத்தைச் சுதந்திர நாடாக அங்கீகரிக்கின்றோம்

தொடர்ச்சி▲

மாற்ற முடிந்தால், அந்த உலகம் ஒரு அற்புதமான உலகமாக மாறும் என்று நாங்கள் உண்மையிலேயே நம்புகிறோம். இந்த மாநாட்டில் இணைந்த நாம் அனைவரும் உலக சமாதான குடியேற்றங்களை உருவாக்கும் உன்னத சமாதான யாத்ரீகர்களாக மாற வேண்டும் என்று நான் முன்மொழிகிறேன்.

ஒரு வரலாற்று முக்கியமான தேர்தலில், இலங்கை மக்கள் பல நூற்றாண்டுகளாக தங்கள் மனதில் இருந்த ஒரு கனவிற்காக தீர்மானம் எடுத்தார்கள் என்பதை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இதன் விளைவாக சட்டவாக்கம் பன்முகத்தன்மை கொண்டது . ஒருபுறம், நாட்டின் முழு மக்களும் அரசாங்கத்தின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்தனர். மறுபுறம், கட்புலனற்ற பாராளுமன்ற உறுப்பினர் உட்பட பெண்கள் மற்றும் ஏனைய இனக்குழுக்களின் பிரதிநிதித்துவம் ஒரு வரலாற்று மைல்கல்லை உருவாக்கியது. பாராளுமன்றத்தில் உள்ள இந்த பன்முகத்தன்மை இலங்கையின் ஆட்சியில் இன பன்முகத்தன்மையை உறுதி செய்கிறது .அனைத்து பிரஜைகளுக்கும் சம உரிமைகள் மற்றும் வாய்ப்புகளை வழங்குவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

அதேபோன்று மக்கள் பிரதிநிதிகள் என்பது பொதுமக்களுக்காக சேவையாற்றும் ஊழியர்கள் அன்றி தேவையற்ற சலுகைகளைப் பெறுபவர்கள் அல்ல என்பதற்கு நாங்கள் ஒரு முன்மாதிரியை காட்டியுள்ளோம். மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு நாட்டையும் மக்களையும் மேம்படுத்துவதாக இருக்க வேண்டும், தங்களைத் தாங்களே வளர்த்துக் கொள்வது அல்ல என்று நாங்கள் கருதுகிறோம்.

இருளுக்கு பதிலாக ஒளியின் பாதையைத் தேர்ந்தெடுத்த நமது நாட்டு மக்கள், 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' என்ற நடைமுறை தொலைநோக்குப் பார்வைக்கு தங்கள் ஆசிர்வாதத்தை வழங்கியுள்ளனர். இந்த வரலாற்று சாதனையை நனவாக்க, ஊழல் இல்லாத நெறிமுறையான ஆட்சி, வறுமை ஒழிப்பு, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் சுத்தமான நாடு ஆகிய முக்கிய துறைகளில் எங்கள் கவனத்தை செலுத்தியுள்ளோம். அதனுடன் இணைந்ததாக , கல்வி மற்றும் சுகாதாரம் குறித்து நாங்கள் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். அவை அனைத்தையும் படிப்படியாக வென்று வருகிறோம்.

இன்று, டிஜிட்டல் ஜனநாயகம் எங்கள் புதிய இலக்காகும். ஒவ்வொரு தனிநபரும் ஒவ்வொரு நாடும் டிஜிட்டல் யுகத்தின் வாய்ப்புகளை அணுக முடியும் என்பதை உறுதி செய்வதே உலகின் முன் உள்ள சவாலாகும். அதில் நாம் வெற்றி பெற்றால், தொழில்நுட்பத்திற்கான பிரவேசம் திறக்கப்படுவதையும் அபிவிருத்தி துரிதப்படுத்தப்படுவதையும் ஆட்சி பலப்படுத்தப்படுவதையும் தவிர்க்க முடியாது. ஆனால் நாம் அவ்வாறு செய்யத் தவறினால், தொழில்நுட்பம் சமத்துவமின்மை, பாதுகாப்பின்மை மற்றும் அநீதிக்கு வழிவகுக்கும் மற்றொரு சக்தியாக இது மாறும் என்று நாங்கள் கருதுறோம்.

டிஜிட்டல் கருவிகளை அணுக முடியாத நாடுகளுக்கு இடையே டிஜிட்டல் பிளவு தெளிவாகத் தெரிகிறது. செயற்கை நுண்ணறிவுத் துறையில் இன்னும் பாரிய இடைவெளிஉருவாகிவருகிறது. இலங்கை உட்பட தெற்காசியாவின் பல நாடுகளிலும், உலகெங்கிலும் உள்ள பல நாடுகளிலும், அபிவிருத்திக்கான கருவியாக செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதற்கு உள்கட்டமைப்பு வசதிகள் குறைவாக இருப்பது தடையாக உள்ளது.

நாம் மிகச் சிறந்த உலகத்தை, மனிதர்களின் நித்திய கௌரவத்தை மதிக்கும் உலகத்தை உருவாக்க வேண்டும். இந்த மாநாட்டின் உறுப்பினர்களான நீங்கள், ஒரு சிறந்த உலகத்தை உருவாக்குவதற்கான சிற்பிகளாக இருக்க வேண்டும். 1945 இல் ஐக்கிய நாடுகள் சபையை நிறுவும் சாசனத்தில் கையெழுத்திட்ட போது அமெரிக்க ஜனாதிபதி ஹரி எஸ். ட்ரூமன் கூறியது போல், நமது எதிர்காலம் உங்கள் கைகளில் உள்ளது. நாம் அச்சம் அல்லது கட்டுப்பாட்டுக்கு உட்படாமல் நம்பிக்கையை முன்னிறுத்தி செயல்பட வேண்டும். உலகை பேரழிவிற்கு இட்டுச் செல்வதற்குப் பதிலாக, எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான உலகத்தை உருவாக்க உறுதிபூண்டுள்ள ஒரு தலைமுறையாக மாற இந்த உச்சிமாநாட்டில் தீர்மானிப்போம்.

இறுதியாக, எனக்கு என் நாட்டின் மீது நம்பிக்கையின் கனவு இருக்கிறது. உங்களுக்கும் உங்களுடைய நாடுகள் தொடர்பில் நம்பிக்கையின் கனவு இருக்கிறது. எனது ஒரே கனவு, என் நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சியான மற்றும் வளமான வாழ்க்கையை வழங்குவதுதான். உங்கள் நாட்டு மக்களுக்கும் இதே போன்ற வாழ்க்கையை வழங்குவதே உங்கள் கனவு என்று நான் நம்புகிறேன். அந்தக் அனைத்துக் கனவுகளுக்காகவும் நம்மைப் பிரிக்கும் பயணத்திற்குப் பதிலாக, கைகளை இணைக்கும் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆரோக்கியமான பூகோளத்தில் அமைதி, கண்ணியம் மற்றும் சமத்துவத்திற்கு அர்ப்பணிப்போம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் குறிக்கோளில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலகத்தை உண்மையாகவே மாற்றியமைப்பவர்களாகுவோம் என நான் உங்களை மரியாதையுடன் அழைக்கிறேன்." – என்றார்.

# காணாமல்போன குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!



நுவரெலியா மாவட்டம், லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வலஹா தோட்டத்தில் இருந்து நேற்று காணாமல்போன குடும்பஸ்தர் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வலஹா தோட்டத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கா.கிருஷ்ணசாமி (வயது 70) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் காணாமல்போன இவரை உறவினர்கள் மற்றும் தோட்ட மக்கள் இணைந்து தேடியபோது, இன்று காலை தேயிலைத் தோட்டப் பகுதியில் சடலமாகக் காணாப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் லிந்துலை பொலிஸார் விசாரணைகளை மேற்கெண்டு வருகின்றனர்.

# லொறி மோதி பொலிஸ் கான்ஸ்டபிள் சாவு!

கொழும்பில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த லொறி ஒன்று, எதிர்த் திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்துக்குள்ளானதில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நிட்டம்புவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரிவுக்குட்பட்ட கொழும்பு – கண்டி பிரதான வீதியில் நம்புலுவ சந்திக்கு அருகில் நேற்று புதன்கிழமை இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநரான பொலிஸ் கான்ஸ்டபிள் பலத்த காயமடைந்து வத்துபிட்டிவல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

வரக்காபொல, மஹேனகமவைச் சேர்ந்த 33 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிளே உயிரிழந்துள்ளார்.



சடலம் வத்துபிட்டிவல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

லொறியின் சாரதி, பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நிட்டம்புவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மோ. சைக்கிளுடன் லொறி மோதி குடும்பஸ்தர் மரணம்




கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இங்குருகொட சந்தியில் லொறி ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் பலத்த காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் கொத்தட்டுவ பகுதியைச் சேர்ந்த 56 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், கிராண்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# மோ. சைக்கிள் மோதி பாதசாரி உயிரிழப்பு!

வீதியில் மோட்டார் சைக்கிள் மோதி பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலவிய பகுதியில் நேற்று புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி மற்றும் பாதசாரி இருவரும் பலத்த படுகாயமடைந்தனர்.

பாதசாரி கற்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

விபத்தில் உயிரிழந்தவர் பாலவிய பகுதியைச் சேர்ந்த 39 வயதுடையவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்த வழக்கில் இலங்கைப் பொலிஸ் அதிகாரியை விடுவித்துத் தீர்ப்பு!





(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

இந்தியாவிற்குள் சட்டவிரோதமாக நுழைந்த இலங்கைப் பொலிஸ் அதிகாரியை ராமநாதபுரம் முதன்மை மாவட்ட நீதிமன்றம் விடுதலை செய்து உத்தரவிட்டது.

இலங்கை கொழும்பு துறைமுக பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்தவர் காவலர் பிரதீப்குமார் பண்டார(வயது 35). இவர் கடந்த 5.9.2020 ஆம் திகதி நள்ளிரவு இலங்கை படகில் ராமேஸ்வரம் அருகே தனுஷ்கோடி கடற்கரையில் வந்திறங்கிய போது, முறையான ஆவணங்களின்றி இந்தியாவிற்குள் நுழைந்தார் என்ற குற்றச்சாட்டிக் மண்டபம் மரைன் பொலிஸார் கைது செய்து, சென்னை புழல் சிறையில் அடைத்தனர்.

விசாரணையில், கொழும்பில் பறிமுதல் செய்து துறைமுகம் பொலா நிலையத்தில் வைக்கப் பட்ட 23 கிலோ ஹெராயின் போதைப்பொருள் மாயமானதில் அவரது சகோதரர் இலங்கைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை தெரியவந்தது.

போதைப்பொருளை பிரதீப்குமார் பண்டார கடத்தி வந்து தன்னிடம் கொடுத்தார் என சகோதரர் விசாரணைகளில் தெரிவித்திருக்கின்றார்.

இந்நிலையில் இவ்வழக்கு சி.பி.சி.ஐ.டி. பொலிஸ/க்கு மாற்றப்பட்டது. ராமநாதபுரம் சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் வழக்குப் பதிவு செய்து, பிரதீப்குமார் பண்டாரவை விசாரணை செய்தனர்.

விசாரணையில் போதைப்பொருள் கடத்தலில் தனது சகோதரர் தன்னை மாட்டி விட்டார் எனவும், அந்தக் கைது நடவடிக்கையில் இருந்து தப்பிக்க சட்டவிரோதமாக இந்தியா வந்தார் எனவும் அவர் தெரிவித்தார்.

இதையடுத்து அவர் ராமநாதபுரம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற உத்தரவுப்படி திருச்சியில் உள்ள இலங்கை அகதிகளுக்கான சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டார்.

அதன்பின் சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்தமையை பிரதீப் குமார்பண்டாரேஒத்துக்கொண்டு,குறைந்த பட்ச தண்டனை வழங்க வேண்டும் என நீதிமன்றத்தில் மனு செய்திருந்தார்.

இந்த நிலையில் இவ் வழக்கில் நேற்று புதன்கிழமை முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி ஏ.கே.மெஹ்பூப் அலிகான், பிரதீப் குமார் பண்டாரவுக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.2 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

பிரதீப் குமார் பண்டார சென்னை புழல் சிறையில் 3 மாதங்கள், அதனையடுத்து பிணையில் திருச்சி சிறப்பு முகாம் என 5 ஆண்டுகளுக்கு மேல் நீதிமன்ற கண்காணிப்பில் இருந்துள்ளார். அவர் நீதிமன்றம் விதித்த அபராதத் தொகையும் செலுத்தினார்.

விதிக்கப்பட்ட சிறை தண்டனை 2 ஆண்டுகளுக்கு மேல், அவர் சிறை மற்றும் சிறப்பு முகாமில் இருந்து உள்ளதால் அவரை நீதிபதி விடுதலை செய்தும், அவர் காவல்துறை மற்றும் குடியேற்ற நடைமுறைகளை முடித்துக் கொண்டு சொந்த நாட்டிற்கு செல்லலாம் எனவும் உத்தரவிட்டார்.

# மட்டக்களப்பில் 7, 8 வயதுகளுடைய இரு மகள்மாரை துஷ்பிரயோகம் செய்த தந்தைக்கு 20 வருடக் கடூழியம்

## மேல் நீதிமன்றம் தீர்ப்பளிப்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேசம் ஒன்றில் தனது 7 மற்றும் 8 வயது மகள்களை 2016 ஆண்டு பாலியல் துஷ்பிரயோகம் செய்த தந்தைக்கு 20 வருட கடூழிய சிறைத்தண்டனை மற்றும் 40 ஆயிரம் ரூபா தண்டம் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுமிகளுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதம் இரண்டு லட்சம் ரூபாவை நஷ்ட ஈடாக வழங்குமாறு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரி.ஜே.பிரபாகரன் கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தார்.

மாவட்டத்தில் ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய தந்தையார் உள நலம் பாதிக்கப்பட்ட தனது ஒரு மகள் உட்பட 7 மற்றும் 8 வயதுடைய இரு மகள்களையும் கடந்த 2016 அக்டோபர் மாதம் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட நிலையில் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் 4 குற்றச்சாட்டுகளின் கீழ் பொலிஸார் வழக்குப் பதிவு செய்த நிலையில் விளக்கமறியலில் அடைக்கப்பட்டு பின்னர் பிணையில் வெளிவந்துள்ளார். இதனை தொடர்ந்து வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்துள்ளன.

இந்த நிலையில் குறித்த நபருக்கு எதிராக சிறுமிகளைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த 4 குற்றச்சாட்டுகள் தொடர்பாக சாட்சியங்கள், சான்றுபொருள்கள் மற்றும் சட்ட வைத்தியர் அறிக்கை மூலம் குற்றவாளியாக கடந்த செப்டம்பர் 27 ம் திகதி இனம் காணப்பட்டார்.

இதனையடுத்து குறித்த வழக்கு விசாரணைக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரி.ஜே.பிரபாகரன் முன்னிலையில் கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை எடுத்துக் கொள்ளப் பட்டபோது 8 வயது சிறுமிக்கு பாலியல் துஷ்பிரயோகம் செய்த முதலாவது குற்றத்துக்கு 20 வருட கடூழிய சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபாவும் இரண்டாவது குற்றத்துக்காக 10 ஆயிரம், தண்டப்பணமாக செலுத்துமாறும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு லட்சம் ரூபா வழங்குமாறு உத்தரவிட்டார்.

அடுத்து பாதிக்கப்பட்ட 7 வயது சிறுமிக்கு முதலாவது குற்றத்துக்கு 20 வருட கடூழிய சிறைத் தண்டனையும், 10 ஆயிரம் ரூபாவும், நான்காவது குற்றத்துக்காக 10 ஆயிரம் ரூபாவும் தண்டப்பணமாக செலுத்துமாறும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு லட்சம் ரூபாவை வழங்குமாறும் இரு 20 வருட கடூழிய சிறைத்தண்டனை சமகாலத்தில் வழங்கப்பட வேண்டும் என நீதிபதி கட்டளை பிறப்பித்தது தீர்ப்பளித்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உண்மை வெளிவரட்டும்

நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு இலத்திரனியல் விசா வழங்கும் விடயம் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவை நிறைவேற்றத் தவறிய குற்றத்துக்காக முன்னாள் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு நாயகமான ஹர்ஷா இலுக்பிட்டியாவுக்கு இலங்கை உயர் நீதிமன்றம் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தமை தெரிந்ததே.

இந்த வழக்கை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தவர்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், பட்டாளி சம்பிக்க ரணவக்க மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் எம்.பி. ஆகியோராவர்.

முன்னைய அரசு திடீரெனக் கொண்டு வந்த விசா வழங்கல் நடைமுறை தொடர்பாக அவர்கள் தாக்கல் செய்த மூல வழக்கு இன்னமும் விசாரணையில் இருக்கின்றது. அது நவம்பர் 20 ஆம் திகதி விசாரணைக்கு வர இருக்கின்றது.

வழக்கின் இடையில் உயர் நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடை உத்தரவை நடைமுறைப்படுத்தத் தவறியமை தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு விசாரணையிலேயே முன்னாள் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு நாயகமான ஹர்ஷா இலுக்பிட்டியாவுக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டு இருக்கின்றது.

புதிய விசா வழங்கும் நடைமுறையை முன்னைய அரசு உரிய - பகிரங்க - கேள்விப்பத்திரக் கோரிக்கைகள் இல்லாமல், ஒளிவுமறைவு முறையில் - டுபாயைத் தளமாகக் கொண்ட ஒரு போலிக் கம்பெனிக்கு 16 ஆண்டு ஒப்பந்தத்தில் வழங்க முற்பட்டது என்பதை மனுதாரர்கள் சுட்டிக்காட்டி இருந்தனர்.

இந்தப் பதினாறு ஆண்டு ஒப்பந்தம் மூலம் அரசாங்கம் சுமார் 3.4 பில்லியன் டொலர் (அதாவது இன்றைய மதிப்பில் ஒரு லட்சம் கோடி ரூபாவுக்கும் அதிகம்) தொகையை இழக்கும் ஆபத்து இருந்ததாக ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றில் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு வழங்கப்பட்ட பின்னரும் அதை நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடித்ததன் மூலம் மட்டும் 300 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகை இழப்பு நாட்டுக்கு ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் இந்த ஒப்பந்தம் நடைமுறையில் தொடர்ந்தால் அரசுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய சரியான இழப்பு பற்றிய கணக்கு விவரங்களை கணக்காய்வாளர் நாயகம் சட்ட ரீதியான கணக்காய்வு அறிக்கை மூலம் வெளிப்படுத்த வேண்டும் என்று ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் கோரியிருக்கின்றார்.

இந்த விவகாரம் தொடர்பாக ஏற்கனவே விசாரணை நடத்திய நாடாளுமன்றக் கணக்காய்வுக் குழு 600 பக்க அறிக்கையொன்றில் இந்த இழப்புகள் பற்றி விரிவாக வெளிப்படுத்தி இருக்கின்றது. இது தொடர்பாக கணக்காய்வாளர் நாயகம் சட்ட ரீதியாக ஆய்வு செய்து உண்மையாக அரசுக்கு ஏற்படப் போகும் நஷ்ட விவரங்களை வெளிப்படுத்த வேண்டும் என்று அந்த அறிக்கை கோரியிருந்தது.

இந்தப் பின்புலத்தில், முன்னைய அரசுகளின் ஊழல் மோசடிகளை வெளிப்படுத்துவதில் தற்போதைய அரசுக்கு நேர்மைத்துதன்மையுடன் கூடிய பற்றுறுதி இருக்குமானால், மேற்படி நவம்பர் 20ஆம் திகதி நடைபெற இருக்கும் இந்த மூல வழக்கின் விசாரணைக்கு முன்னர் இந்த விசா வழங்கல் ஊழல் முறைமை முழுமையாகத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் அரசுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய இழப்பு பற்றிய முழுமையான - சட்ட ரீதியான - கணக்காய்வு அறிக்கையை கணக்காய்வாளர் நாயகம் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊழல்பெருச்சாளிகளை அம்பலப்படுத்துவதற்கு இத்தகைய நடவடிக்கை அவசியம். அரசு செய்யுமா? பார்த்திருப்போம்.

# வடக்குக் கிழக்கில் தமிழர் வாழ்விடங்களில் இராணுவமயமற்ற மக்கள் நிர்வாகம் வேண்டும்!

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் வேண்டுகோள்

முன்னாள் இராணுவத்தினருக்கு ஆளுநர், செயலாளர், தூதர் பொறுப்புகள் வழங்கக் கூடாது. இராணுவம் ஆக்கிரமித்துள்ள இடங்களை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஐ.நாவில் சிட்னியில் வசிக்கும் மனித உரிமைச் செயற்பாட்டாளர் சாரதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் 60 வது கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்றுள்ள கனடாவில் வசிக்கும் மனித உரிமை செயற்பாட்டாளர் சாரதா உரையாற்றினார்.

இலங்கையில் போர் முடிந்து பதினாறு ஆண்டுகள் கடந்தும், இராணுவமயமாக்கல் தமிழர் வாழ்விடங்களில் இன்னும் பொது மக்களின் வாழ்க்கையை வடிவமைத்துக் கொண்டிருக்கிறது.

இராணுவ முகாம்கள் அமைக்க ஆக்கிரமிக்கப்பட்ட தனியார் நிலங்கள் கணிசமான அளவில் இன்னும் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. இதனால் இடம்பெயர்ந்த குடும்பங்கள் தங்களுடைய வீடுகளுக்கும் வாழ்வாதாரத்துக்கும் திரும்ப முடியாமல் தடுக்கப்படுகிறார்கள். இது ஒரு இனப்படுகொலையின் வடிவம் என்றே பார்க்கப்படுகிறது.



சீருடை அணிந்த மற்றும் முன்னாள் சீருடை அதிகாரிகளும் உள்ளூர் நிர்வாகத்தில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகிறார்கள். முன்பு, மேஜர் ஜெனரல் சந்திரசிறி வட மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டார். ரியர் அட்மிரல் மோகன் விஜேவிக்ரம பல ஆண்டுகள் கிழக்கு மாகாண ஆளுநராகப் பணியாற்றினார்.

இந்த முறைமையானது, குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்களுக்கு மூத்த அரசுப் பொறுப்புகள் மற்றும் தூதரகப் பதவிகள் வழங்கி பாராட்டுப் பத்திரம் அளிப்பதாக உள்ளது.

முள்ளிவாய்க்கால் தாக்குதலின்போது பேரழிவு ஏற்படுத்தியதாக வெளிப்படையாகப் பெருமைடித்த போர்க் குற்றவாளி, முன்னாள் விங் கமாண்டர் சம்பத் துயகொந்தாவர் ஜனாதிபதி அனுரா குமார திஸாநாயகாவால் பாதுகாப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக, மனித உரிமை மீறலில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகள் வெளிநாடுகளுக்குத் தூதர்களாக அனுப்பப்பட்டனர். இத்தகைய நியமனங்கள் அவர்களின் பெயர்ப் பெருமையை சுத்திகரிப்பதோடு, பொறுப்பேற்க வேண்டிய நிலையைத் தடுக்கின்றன.

எனவே, இந்தக் கவுன்சிலும் உறுப்பினர் நாடுகளும், தமிழர் வாழ்விடங்களில் முழுமையான இராணுவமயமற்ற நிர்வாகம் வேண்டும். இலங்கை முன்னாள் இராணுவத்தினரை ஆளுநர்கள், செயலாளர்கள், தூதர்கள் என நியமிக்கக் கூடாது என்பதை வலியுறுத்த வேண்டும்.

மேலும் குற்றச்சாட்டுக்குள்ளான போர்க்குற்றவாளிகளுக்கு எதிராகத் தடைகள் மற்றும் உலகளாவிய நீதித்துறை வழக்குகளைத் தொடர வேண்டும். தமிழர் வாழ்விடங்களை இராணுவமயமற்றதாக மாற்றி, நிலங்களைச் சொந்தக்காரர்களிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என்று தெரிவித்தார் மனித உரிமைச் செயற்பாட்டாளர் சாரதா.





# வடக்கு இளைஞர்களும் வெளிநாட்டு மோகமும்!



**மதுஷாயினி மதிவதனன்**
**(ஊடக கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்)**

இன்றைய வடக்கு சமூகத்தை நோக்கிப் பார்க்கையில் இளைஞர்களின் மனதில் வெளிநாடு செல்லும் எண்ணமே மிகப்பெரிய கனவாக நிலை கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. கல்வி, வேலை, வருமானம், வசதி ஆகிய அனைத்துக்கும் தீர்வாக வெளிநாடு தான் என அவர்கள் கருதுகின்றனர். அவர்களின் குடும்பங்களும் சமூகமும் இதையே உறுதிப்படுத்துகின்றன. வெளிநாடு சென்றவர்கள் அனுப்பும் பணத்தால் வீடுகள் எழுந்து நிற்கின்றன, சமூக அந்தஸ்து உயரும் என கருதி மற்றைய இளைஞர்களும் குடும்பங்களும் எங்கள் எதிர்காலமும் அப்படியே அமைய வேண்டும் என்ற எண்ணத்தில் ஈர்க்கப்படுகின்றனர்.

ஆனால் இந்த வெளிநாட்டு மோகத்தின் இருண்ட பக்கம் மிகக் கடுமையானது. பலர் தங்களுடைய கல்வியை நடுவே நிறுத்திவிட்டு வெளிநாடு செல்லும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். தாயகத்தில் உள்ள வேலை வாய்ப்புகளைக் கண்டு கொள்ளாமல் வெளிநாடு தான் வாழ்க்கை தரும் நிலம் என்ற தவறான நம்பிக்கையில் சிக்கிக் கொள்கின்றனர். மேலும் பலர் செல்லும் முன்பே மோசடி முகவர்களின் வலையில் அகப்பட்டு தங்கள் சொந்தச் சொத்துக்களையும் குடும்பச் சேமிப்பையும் இழந்து நிர்க்கதியாய் நிற்கின்ற நிலையே எம்மவர்களிடத்தில் இன்று நிலை கொண்டுள்ளது.


வெளிநாடு சென்ற பின்பும் நிலைமை எப்போதும் கனவுகளைப்போல அமையவில்லை. அங்கே கிடைக்கும் வேலை பல நேரங்களில் எதிர்பார்த்தவாறு அமையாமல், சட்டவிரோத தொழில்களில் சிக்கித் தவிக்க நேரிடுகிறது. வங்கிக் கடன், அடமானம், சமூகத்தில் கடன் வாங்குதல் ஆகியவற்றின் சுமையுடன் புறப்படும் இளைஞர்கள் வெளிநாட்டில் வேலை வாய்ப்பு இன்றி துன்புறும்போது அந்தக் கடன்களைச் செலுத்த இயலாமல் தவிக்கின்றனர். இதனால் குடும்பங்களும் பொருளாதார ரீதியாக கடுமையான சிக்கலில் சிக்கிக்கொள்கின்றன. சிலர் வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் துயரான சூழலும் உருவாகிறது.

பெண்களும் வெளிநாட்டு மோகத்தில் பிந்தியவர்கள் அல்லர். திருமணம் என்ற பெயரில் வெளிநாடுகளுக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஆனால் அங்கே சென்ற பின்பு எதிர்பார்த்த வாழ்க்கை கிடைக்காமல் துன்புறுத்தலுக்கும் அடிமைத்தனத்துக்கும் ஆளாகும் சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன. குடும்பங்களின் ஆசை, சமூக அழுத்தம், தனிப்பட்ட கனவுகள் எனப் பல காரணங்களால் அவர்கள் இக்கட்டான நிலைகளில் சிக்கிக்கொள்கின்றனர்.

வடக்கு இளைஞர்களின் வெளிநாட்டு மோகத்தைப் பயன்படுத்திக் கொண்டு, பல போலி முகவர்கள் அவர்களை ஏமாற்றும் நிகழ்வுகள் நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றன. கடினஉழைப்பில்சம்பாதித்த பணத்தை முகவர்களுக்குக் கொடுத்து வெளிநாடு செல்ல முடியாமல் பணத்தையும் கனவுகளையும் இழந்து நிற்கும் நிலை மிகவும் வருத்தகரமானது. இந்த நிலையைத் தடுப்பதற்காக சில முக்கியமான

**தொடர்ச்சி▼**

# வடக்கு இளைஞர்களும் வெளிநாட்டு மோகமும்!



தொடர்ச்சி▲

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

முதன்மையாக அரசு அங்கீகாரம் பெற்ற பதிவு செய்யப்பட்ட வேலை வாய்ப்பு முகவர்களையே நாட வேண்டும். பதிவு எண் மற்றும் உரிமம் ஆகியவை சரிபார்க்கப்பட்ட பின் மட்டுமே அவர்களிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். எந்தவிதமான வாய்மொழி வாக்குறுதிகளையும் நம்பாமல் அனைத்து விவரங்களும் எழுதப்பட்ட சட்ட பூர்வ ஒப்பந்தமாக இருக்க வேண்டும். வேலை, சம்பளம், தங்குமிடம், விசா போன்ற விவரங்கள் தெளிவாக ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட வேண்டும். முகவர்களிடம் பணம் கொடுக்கும்போது எப்போதும் பற்றுச் சீட்டு பெற்றுக் கொள்ள வேண்டும். கையில் பணம் கொடுத்து பற்றுச் சீட்டு பெறாமல் இருப்பது இளைஞர்களின் மிகப்பெரிய தவறாகும்.

அதேபோல் மிகுந்த தொகையை முன்கூட்டியே கேட்கும் முகவர்களைத் தவிர்க்க வேண்டும். வெளிநாட்டுப் பயணத்துக்கு முன்னர் வேலை வாய்ப்பு ஆணையம், தொழிலாளர் துறை, தூதரகம் போன்ற அதிகார பூர்வ நிறுவனங்களை அணுகி ஆலோசனை பெறுவது பாதுகாப்பான நடைமுறையாகும். அத்துடன் அந்த முகவர் வழியாக ஏற்கனவே வெளிநாடு சென்றவர்களிடமிருந்து நேரடியாக அனுபவத்தைக் கேட்டறிதலும் நல்லது. சந்தேகமான முகவர்களைச் சந்தித்தால் உடனடியாக பொலிஸ் அல்லது வேலைவாய்ப்பு ஆணையத்தில் புகார் அளிப்பதும் சமூகத்தைப் பாதுகாக்கும் முக்கியமான செயல் ஆகும்.

இந்த நிலையை மாற்றுவதற்கு பல்வேறு வழிமுறைகள் அவசியமாகின்றன. வெளிநாடு செல்லும் கனவுகள் உண்மையிலேயே நம் வாழ்க்கையை உயர்த்தக் கூடியவை. ஆனால், அதன் பின்னால் இருக்கும் சிக்கல்களை உணராமல் செல்லும் போதுதான் பிரச்சினைகள் தோன்றுகின்றன. எனவே இளைஞர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய சில முக்கியமான அம்சங்கள் உள்ளன.

முதலில் வெளிநாடு செல்லும் ஆசை மட்டும் இல்லாமல் தாயகத்தில் கிடைக்கும் வாய்ப்புகளையும் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நம் திறமைகளை வளர்த்து சொந்த ஊரில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபடுவது நம் சமூகத்துக்கும் நமக்கும் நிலையான பலன்களைத் தரும்.

அடுத்ததாகக் கடன் சுமையை ஏற்றுக் கொண்டு வெளிநாடு செல்லும் பழக்கத்திலிருந்து விலக வேண்டும். கடன் சுமையானது வாழ்க்கையை விட கனமாக மாறக்கூடும். எனவே, வெளிநாடு செல்லும் முன் நிதி நிலையை நன்றாக ஆராய்ந்து தேவையற்ற ஆபத்துகளைத் தவிர்க்க வேண்டும். மேலும் வெளிநாடு சென்றாலும் அங்குள்ள சட்டங்களையும் பண்பாட்டையும் மதித்து வாழ்வது அவசியம். சட்ட விரோத வேலைகளில் ஈடுபடாமல் அங்கு கிடைக்கும் வாய்ப்புகளைச் சரியான முறையில் பயன்படுத்தினால்தான் பாதுகாப்பான வாழ்வு சாத்தியம். சமூகத்தில் வெளிநாடு சென்றால்தான் அந்தஸ்து உயரும் என்ற தவறான மனப்பாங்கை மாற்றிச் சொந்த ஊரில் உழைக்கும் இளைஞர்களுக்கும் மதிப்பு வழங்கப்பட வேண்டும்.

இறுதியாக பார்க்கும்போது வெளிநாடு செல்வது தவறானது அல்ல. அது ஒரு வாய்ப்பு. ஆனால் அது கண்மூடித்தனமான மோகமாக மாறும் போது தனிநபரின் எதிர்காலத்தையும் குடும்பத்தின் நலனையும்

சமூகத்தின் முன்னேற்றத்தையும் பாதிக்கிறது. வடக்கு இளைஞர்கள் தங்கள் சொந்த ஊரில் கிடைக்கும் வாய்ப்புகளையும் திறமைகளையும் பயன்படுத்திக் கொண்டால் வெளிநாடு செல்லாமல் இருந்தாலும் வளமும் வளர்ச்சியும் நிச்சயம் பெறக்கூடியவை. வெளிநாடு ஒரு கனவு என்றாலும் தாயகமே உண்மையான வாழ்க்கையின் அடித்தளம் என்பதை உணர வேண்டும்.

வெளிநாடு செல்வது ஒரு வாய்ப்பாக இருக்கலாம். ஆனால் அது வாழ்க்கையின் ஒரே இலக்கு அல்ல. கண்மூடித்தனமான வெளிநாட்டு மோகத்தில் சிக்கிக் கொண்டால் இளைஞர்களும் குடும்பங்களும் சமூகமும் பெரும் இழப்பைச் சந்திக்க நேரிடுகிறது. தாயகத்துக்குத் தேவையானது தன்னம்பிக்கையுடன் உழைக்கும் இளைஞர்களும் தங்கள் திறமைகளை சொந்த மண்ணில் பயன்படுத்தத் தயங்காத மனப்பான்மையும் ஆகும்.

எந்த வெளிநாடும் தாயகத்தின் பாசத்தையும்

தொடர்ச்சி▼

# வடக்கு இளைஞர்களும் வெளிநாட்டு மோகமும்!

தொடர்ச்சி▲

மண்ணின் மணத்தையும் மாற்ற முடியாது. நம் ஊரின் மண் நமக்கு உணவையும் வாழ்வையும் அளிக்கிறது. நம் மக்கள் நமக்குப் பாசத்தையும் மதிப்பையும் வழங்குகிறார்கள். ஆகவே வெளிநாட்டுக் கனவுகளை விரும்புவது தவறு அல்ல. ஆனால் தாயகத்தையே முன்னுரிமையாகக் கருதி நம் ஊரின் வளர்ச்சிக்காக உழைப்பதே உண்மையான வெற்றி ஆகும்.

தாயகத்தின் மதிப்பையும் நம் மக்களின் பாசத்தையும் மறக்காமல் எங்கு சென்றாலும் நம் அடையாளத்தை காப்பது ஒவ்வொரு இளைஞனின் கடமையாகும்.




### மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை

# ஒப்பந்தகாரர்களைப் போன்று இந்த அரசு நடத்துகிறது!

### கவலையளிக்கின்றது என்கிறார் சத்தியலிங்கம் எம்.பி.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை இந்த அரசு ஒப்பந்தகாரர்கள் போன்று நடத்துவது கவலையளிக்கின்றது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று (24) இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக அபிவிருத்தித் திட்டங்கள் முடக்கப்பட்டிருந்தாலும் தற்போது படிப்படியாக இந்த அரசு ஓரளவுக்கேனும் குறிப்பிட்ட சில அத்தியாவசியமான அபிவிருத்தி திட்டங்களுக்காக நிதியொதுக்கீடு செய்துவருவது வரவேற்கப்படவேண்டியதாகும்.

அந்த வகையில் உள்ளூராட்சி மன்றங்களின் ஆளுகைக்கு உட்பட்ட கிராமிய உள்ளக வீதிகளை ஓரளவுக்கேனும் மக்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் திருத்தம் செய்வதற்கு துறைசார்ந்த அமைச்சால் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை வரவேற்கின்றேன்.

எனினும் இந்த நிதியொதுக்கீட்டின் கீழ் திருத்தப்படவுள்ள வீதிகளின் தெரிவானது சம்மந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுடன் கலந்துரையாடப்படாது தெரிவு செய்யப்பட்டுள்ளமை கவலையளிக்கும் விடயமாகும். அதிலும் சில வீதிகள் குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றத்தால் சட்டரீதியாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாத வீதிகளாகும். இங்கு கட்சி



அரசியலுக்கு அப்பால் ஜனநாயக முறைப்படி நடைபெற்ற தேர்தலில் மக்களின் அதிகப்படியான ஆசனங்களைப் பெற்ற கட்சிகளே உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைத்துள்ளன.

அதேபோன்று அந்த சபைகள் ஒவ்வொரு வட்டாரங்களிலும் மக்கள் சந்திப்புகளை நடத்தி மக்கள் பங்களிப்புடன் தேவைகளை இனங்கண்டு அவற்றை முன்னுரிமை அடிப்படையில் தேவைப் பட்டியல் தயாரித்து வைத்திருக்கின்றார்கள். எனவே இங்கு அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் மக்களால் முன்மொழியப்பட்ட முன்னுரிமைப்படுத்தப்பட்ட வீதிகளைப் புனரமைப்பதே சரியான முறையாகும்.

குறிப்பிட்ட ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் கீழ் வருகின்ற அனைத்து வட்டாரங்களையும் உள்வாங்கி வீதி அபிவிருத்திகளை செய்வதே சிறந்தது. எனினும் துரதிர்ஷ்டவசமாக வீதித்தெரிவுகள் சம்மந்தப்பட்ட சபையுடன் கலந்துரையாடப்படாது நடைபெற்றுள்ளமையைத் துறைசார்ந்த அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவருகின்றேன்.

அத்துடன் இந்த நிதியொதுக்கீடானது மாவட்ட செயலகத்துக்கே வழங்கப்பட்டுள்ளது. முறையான தொழிநுட்ப மதிப்பீடு செய்யப்படாது நிதியொதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. முன்மொழியப்பட்ட சில வீதிகளுக்கான திருத்த வேலைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி போதாமலுள்ளது. தெரிவுசெய்யப்பட்ட வீதிகளின் விபரங்கள் பிரதேச செயலகத்தால் உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்படுகின்றது.

குறிப்பட்ட வீதிகளுக்கான நிதியொதுக்கீடு சபைகளுக்கு வழங்கப்படவில்லை. இங்கு சபைகள் ஒப்பந்தகாரர்களை போன்று செயற்படவேண்டியுள்ளது. அதாவது மாவட்ட செயலகத்துடன் வேலைக்கான ஒப்பந்தமொன்றைச் செய்து பின்னர் வேலைகள் முடிவுற்றதும் வேலைக்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உள்ளூர் அதிகார சபையை அவமதிக்கும் செயற்பாடாகும்.

எனவே சம்மந்தப்பட்ட சபைகளுடன் கலந்துரையாடி அனைத்து வட்டாரங்களையும் உள்ளடக்கிய வகையில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட வீதிகளை புனரமைப்பதற்காக நிதியொதுக்கீடுகளை நேரடியாக சபைகளுக்கு வழங்கவேண்டும்.- என்றார்.

# பாண்டிருப்பு திரௌபதை அம்மன் தீ மிதிப்பு மகோற்சவம் ஆரம்பம்!





(வி.ரி.சகாதேவராஜா)

மகாபாரத இதிகாச வரலாற்றைக் கூறும் இலங்கையின் பிரசித்திபெற்ற பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று முன் தினம் (23) செவ்வாய்க்கிழமை மாலை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமானது.

எதிர்வரும் திங்கட்கிழமை சுவாமி எழுந்தருளப்பண்ணலும் மறுநாள் செவ்வாய்க்கிழமை நாள்கால் வெட்டுதலும் நடைபெறும்.

தொடர்ந்து ஒக்ரோபர் 04 ஆம் திகதி கல்யாணக்கால் வெட்டுதலும் ஒக்ரோபர் 08 ஆம் திகதி வனவாசமும் ஒக்ரோபர் 09 ஆம் திகதி தவநிலையும் இடம்பெற்று ஒக்ரோபர் 10 ஆம் திகதி மாலை தீ மிதிப்பு வைபவம் இடம்பெறும். மறுநாள் பாற்பள்ளையத்துடன் உற்சவம் நிறைவு பெறும்.

தொடச்சியாக 18 நாள்கள் நடைபெறும் இத்திருவிழாவுக்கு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் பெருமளவு பக்தர்கள் வருகை தருவது வழமையாகும்.



# சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான தேசியக் கொள்கைச் செயலமர்வு



(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை என்பவற்றின் ஏற்பாட்டில், சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசியக் கொள்கை தொடர்பான செயலமர்வானது, நேற்று (24) மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட அரச அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார தலைமையில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வில், பொலிஸ் உயர் அதிகாரிகள் பலரும் பங்குபற்றினர்.

செயலமர்வின் வளவாளர்களாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அநுராதபுர மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களான மகேந்திர தசநாயக்க, லக்மல் சேனாரத்ன மற்றும் எஸ்.ஜி.உதர சந்தமாலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்து நிறுத்துவது, மற்றும் அது தொடர்பான சட்டங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து இந்தச் செயலமர்வில் கலந்துரையாடப்பட்டது.

சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசியக் கொள்கையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் பொலிஸாரின் பங்கு குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

பாடசாலைகள் மற்றும் சமூக மட்டத்தில் சிறுவர் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான புதிய உத்திகள் குறித்தும் இந்தச் செயலமர்வில் கவனம் செலுத்தப்பட்டது. சிறுவர் பாதுகாப்புச் சவால்களை எதிர்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கான ஒரு தளமாக இந்தச் செயலமர்வு அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் செயலமர்வில் திருகோணமலை மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# இந்து சமய பாட ஆலோசனை சபையின் கலந்துரையாடல் கல்வி அமைச்சில்

அண்மையில் கல்வி அமைச்சில் இந்து சமய பாட ஆலோசனை சபையினரின் இரண்டாவது கலந்துரையாடல் பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹறிணி அமரசூரிய தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது இராமகிருஷ்ணா மிஷன் அக் ஷராத்மானந்த மஹறராஜ் சுவாமி, சின்மையா மிஷன் குணா ஜித்தானந்த சுவாமி, சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா, வைத்தீஸ்வர குருக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.







# திருகோணமலை மாவட்டத்தின் தனித்துவமான கும்ப விழா!

## ஒரு பண்பாட்டியல் பார்வை



**(எஸ்.கீதபொன்கலன்)**

ஒவ்வொரு பிரதேசத்துக்கும் ஒவ்வொரு தனித்துவமான கலாசார அடையாளம் உண்டு. அந்த வகையில் திருகோணமலை மாவட்டத்தின் தனித்துவமான அடையாளமாக விளங்குவது கும்ப விழாவாகும். நாம் இங்கு கும்பவிழா என அழைத்தாலும், 'கும்பம்' என்பதே இங்கு பொதுப்படையான வழக்கு.

திருகோணமலை மாவட்டத்தில் நகரத்திலும் நகரை அண்டிய பகுதிகளிலும்,தம்பலகாமத்திலும், மூதூர் கிழக்கிலும்,நிலாவெளியிலும், சாம்பல் தீவிலும் கும்ப விழா பாரம்பரியமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மூதூர் கிழக்கில் வரலாற்று பழமை மிக்கதும் தொன்ம மரபு சார்ந்த கிராமங்களான சேனையூர், கட்டைபறிச்சான்,மருத நகர், கல்லம்பார் அம்மன் நகர்,கடற்கரைச் சேனை,சாலையூர்,சந்தோசபுரம் ஆகிய கிராமங்களில் கும்ப விழா மிகச் சிறப்பாக பரம்பரை பரம்பரையாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

தம்பலகாமம் நீண்ட வரலாறு கொண்ட பண்டைத் தமிழ் கிராமம். கடல் நடுவே காணும் தீவுக் கூட்டங்கள் போல வயல்களின் நடுவே திட்டுத்திட்டாய் தெரியும் குடியிருப்புக்கள்.கோயில் குடியிருப்பு, புதுக்குடியிருப்பு,பட்டிமேடு,கூட்டாம் புளி,கள்ளிமேடு,முன்மாரித் திடல், சிப்பித் திடல்,வர்ண மேடு,நாயன்மார் திடல்,குஞ்சடப்பன் திடல்,கரச்சிதிடல், நடுப்பிரப்பன் திடல் என தம்பலகாமத்தின் கிராமங்களில் கும்ப விழா அதன் தனித்துவத்தை பறை சாற்றி நிற்கிறது.

திருகோணமலை கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்து வரலாற்றுப் பழமையும் நவீனத்துவத்தின் வாசல்களையும் ஒருங்கே கொண்ட அழகிய தமிழர் தலை நகர். இங்கு கும்ப விழா ஒரு பெரும் பண்பாட்டின் அடையாளமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. கும்பத்து மாலில் தொடங்கிய இம் மரபு இன்று பெரும் சமஸ்கிருத மயப்பட்ட ஆலயங்களுக்குள்ளும் தன் செல்வாக்கு வீச்சை வெளிப்படுத்தி நிற்கிறது.நகரை அண்டிய பகுதிகளான சல்லி, புளியங்குளம், லிங்கநகர், சாம்பல்தீவு ஆகிய இடங்களிலும் நகரத்தில் கும்பத்து மால்,திருக்கடலூர் பேச்சியம்மன் கோயில்,காளி கோயில்,பத்தாம் நம்பர் கண்ணகியம்மன், வட பத்திர காளி கோயில்,வராகி கோயில், மடத்தடி மாரியம்மன், மனையாவெளி மாரியம்மன்,வில்லூன்றி கந்தசாமி கோயிலடி வைரவர், உவர்மலை கண்ணகி அம்மன் கோயில் என நீட்சி கண்டுள்ளது.

கும்பம், கும்பத்துமால், சாமியாட்டம், சாட்டையடி, மறிப்புக்கட்டு, தீத்தச்சட்டி, மறிப்பை முறித்தல், கட்டை வெட்டுதல், உருவேற்றுதல், மந்திரம், மந்திர உச்சாடனம்,மடை, சிலம்பு, பறை உடுக்கு,பூசாரி, இணைப்பூசாரி என இதனோடு இணைந்து வருகின்ற கலைச்சொற்களின் பட்டியல் நீளும்.

கும்பம் என்பதற்கு நேரடியான தமிழ் சொல் குடம் என்பதாகும். இதனால் தான் கும்பாபிஷேகம் என்ற சமஸ்கிருத சொல்லுக்குப் பதிலாக குடமுழுக்கு என்ற சொல் பயன்பாட்டில் உள்ளது. ஆனால் கும்பம் ஒரு தமிழ் சொல்லாகவே இங்கு மாறி ஒரு பண்பாட்டின் அடையாளமாக வெளிப்பட்டு நிற்கிறது.

கும்பம் பற்றி திருகோணமலை பண்டிதர் வடிவேல், இது சீக்கியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது எனக் குறிப்புக்களில் எழுதியுள்ளார். ஆனால் சீக்கியரது மத அனுஸ்டானங்களிலோ அவர்களது கலை நிகழ்வுகளிலோ இத்தகைய கலாசார அடையாளங்களை காணமுடியவில்லை.அவர்களது நடனமான பங்காரா நடனமும் அதனோடு இணைந்த துள்ளல் இசையும் அமைந்திருக்கிறது. அத்துடன் அவர்களது சடங்கு முறைகளில் கும்பம் போன்ற எந்த ஆதாரத்தையும் காண முடியவில்லை.எனினும் பிரித்தானியரின் ஆட்சியின் போது திருகோணமலை கடற்படைத்தளத்தில் சீக்கிய படையினர் பணியாற்றினர்.அவர்கள் நவராத்திரி பூஜையின் நிறைவு நாளில் ஒன்பது தினமாக பூசித்த கலசத்தை (கும்பத்தை) ஊர்வலமாக எடுத்து செல்லும் முறை இருந்தது என்று செவிவழி வரலாறு ஒன்று திருமலையில் சொல்லப்படுகின்றது.

இலங்கையில் திருகோணமலை தவிர்ந்து வேறு எந்த மாவட்டத்தில் மட்டுமின்றி இந்தியா உற்பட உலகின் வேறு எந்த நாட்டிலும் கும்ப விழா நடைமுறையில் இல்லையென்றே சொல்லலாம்.

மட்டக்களப்பில் கும்பம் சொரிதல் நடைமுறையில் உள்ளது. மாரியம்மன் பேச்சியம்மன் சடங்குகள் முடிவடையும் கடைசி நாளில் கடலில் அல்லது ஆற்றில் கும்பம் சொரிதல் சடங்கு நடைபெறும். அதற்கும் திருகோணமலையில் நடக்கும் முறைமைகளுக்கும் நிறையவே வேறுபாடு காணப்படுகிறது.

திருகோணமலையில் நடைபெறும் கும்பவிழா நவராத்திரியோடு தொடர்புபட்டது. மட்டக்களப்பு கும்பம் சொரிதல் வைகாசி ஆனி மாதங்களில் நடைபெறும். மாரியம்மன் (கண்ணகி) சடங்குகளோடு தொடர்புபட்டு நிற்கிறது.

கும்ப விழா எப்போது தொடங்கியது

தொடர்ச்சி▼

# திருகோணமலை மாவட்டத்தின் தனித்துவமான கும்ப விழா!

**தொடர்ச்சி▲**

என்ற கேள்வி பலர் மனதிலும் எழுவது இயற்கையே. சடங்குகளுக்கும், நம்பிக்கைகளுக்கும் தொடக்கமென்ன? முடிவென்ன? என அடிமுடி தேடமுடியாது. சடங்குகளும் நம்பிக்கைகளும் மனித நாகரிகத்தின் தொடர்ச்சியான செயற்பாடுகளே. அவை காலங்காலமாக பல தலைமுறைகள் தாண்டி நீண்டு செல்லும் மரபுகள் திருகோணமலை கும்ப விழாவும் அத்தகையதே.

இத்தகைய கேள்விகளும் விடைகளும் இருந்தாலும் மூலத்தைத் தேடுதல் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

கேரளாவில் நடைமுறையில் உள்ள சடங்குகளில் நாம் இந்த முறையிலான அமைப்பைக் காணலாம். தேயாட்டம், ஒட்டம், துள்ளல் பகவதி அம்மனுக்கு நடக்கும் சடங்குகள் நம் கும்ப சாயலைக் கொண்டுள்ளன.

ஒவ்வொரு பிரதேசமும் தமக்கான பண்பாட்டு மரபுகளை தமக்குள்ளாகவே உருவாக்குகின்ற போதும், வேறொரு பண்பாட்டிலிருந்து வருகின்றவைகளையும் உள்வாங்கிக் கொண்டு, புதிய வடிவமாய் பரிணமிக்கின்றமையையும் உலக பண்பாட்டு வரலாறு உணர்த்தி நிற்கின்றது.

பொதுவாக, தென்னாசிய மரபுக் கலைகள் சடங்குகளின் அடிப்படையிலேயே உருவாகியிருக்கின்றன. கும்ப விழாவும், ஒரு சடங்காகவும் கலையாகவும் வெளிப்படுவதை நாம் காணலாம்.

தென்னாசிய மரபில் சடங்குகள் கலையோடு இணைந்தே பயில் நிலையில் உள்ளன. கும்பவிழா ஒன்பது நாள் சடங்கும் அதனோடு இணைந்து வருகின்ற பூசைகளும், சாமியாட்டமும் மனிதனின் நம்பிக்கையின் வழிவந்த கலையின் சங்கமிப்பே.

சடங்குகளின் அடிப்படையிலேயே கலைகளின் உருவாக்கம் என்பது உலக வரலாற்றில் நாம் கிரேக்கத்தில் டயோனிசஸ் தெய்வத்துக்குச் செய்கிற சடங்குகளே நாடகமாக உருமாறுகிறது. ரோமானிய மரபில் வீனஸ் தெய்வத்துக்குரிய சடங்குகளும்,எகிப்தின் பழைமைமிகு நாடக உருவாக்கமும் கலைகளின் உருவாக்கத்தால் சடங்குகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன.இங்கு கும்பமும் இன்றுவரை சடங்காகவும் கலையாகவும் தொடரும் இரு பண்பாட்டு கையளிப்பாக அமைந்துள்ளது.

ஆசிய மரபில் சீன நடனங்கள், யப்பானிய மரபில் நோகபுகி நடன நாடக முறைமைகள்,இதற்குரிய பாலித்தீவு நடனங்கள்,தாய்லாந்தின் நடன முறைமைகள் சடங்காக உருவாகி கலையாக மாறியவையே. இன்றும் அவற்றுள் சில கலையாகவும் சடங்காகவும் தொடர்வதை நாம் காணலாம்.ஏன் சிங்கள மரபில் பல்வேறு கலைகளையும் பயின்று அதன் வெளிப்பாடாக பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர்.கும்ப விழாவில் வருகின்ற கும்ப ஆட்டம் ஒவ்வொருவருக்குள்ளிருக்கும் அல்லது புதைந்து கிடக்கும் கலைதிறனின் வெளிப்பாடாகவே நாம் காணமுடியும்.

கும்பம் எடுத்தல், கும்பம் தூக்குதல் என்ற நிகழ்வில் பூசாரியார் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தெய்வத்தை உருவகப்படுத்தி அவர்கள் மீது மந்திரங்களை உச்சாடணம் செய்து ஏற்றுகிறார்களோ, அதன் மூலமாக அந்தத் தெய்வங்கள் பற்றிய ஐதீகங்களையும், புராணங்கள் கதைகள் கூறுகின்ற குணாம்சங்களையும் உள்வாங்குகிறார்கள். பின்னர் ஆடுகிறபொழுது அந்த தெய்வமாகவே தங்களை உருவகித்துக் கொண்டு ஆடுகிறார்கள். பரம்பரையாக தங்கள் குலமரபு தெய்வங்களையும் வெளிப்படுத்துவர். உதாரணமாக மாரியம்மன் என்றால் மிகவும் நளினமான ஆட்டம் வெளிப்படும். காளி என்றால் மிகவும் ஆக்ரோசமான ஆட்டத்தைக் காணலாம்.

அந்தந்த கடவுளர்களை உருவகித்துக்கொள்ளல் இங்கு முக்கியப்படுகிறது.ஒரு நாடக நெறியாளன் எப்படி ஒரு பாத்திரத்துக்கான குணாம்சங்களை நடிகர்களுக்குச் சொல்லிக் கொடுப்பானோ அதேபோலவே மந்திரம் மூலம் ஒரு பூசாரி அந்த தெய்வத்துக்குரிய மந்திரங்களை உச்சாடனத்தில் அழைக்கிறபொழுது அந்த தெய்வமே எழுந்து வருகிறது போல அமையும். அந்தக்காட்சி, வீரபத்திரன் என்றால் தக்கனின் யாகத்தை அழிக்க அகோர வீரபத்திரன் புறப்பட்ட காட்சியை மந்திரம் மூலம் வெளிப்படுத்த வீரபத்திரனாக தன்னை உருவகித்து கொண்ட ஆட்டம் வெளிப்படும்.இங்கு பங்குகொள்கிற ஒவ்வொருவரும் தாங்கள் ஒரு கலை வெளிப்பாடடைச் செய்கிறோம் என்று அறியாமலேயே கலைஞர்களாக பரிணமிக்கின்றனர்.

இந்திய நாட்டிய சாஸ்திரத்தில் பரத முனிவர் முதல் நாடகமாக பாற்கடல் கடைந்த கதை என்பது ஒரு சடங்குத் தன்மையுடன்தான் நடைபெறுகிறது. நாட்டிய சாஸ்திரத்தின் தொடக்கமே சடங்குதான். அந்த சடங்கிலிருந்துதான் நடனமுறைமைகளை பின்னாளில் வேறுபடுத்தி அதற்கான இலக்கணங்களை உருவாக்கினார்.

நாட்டிய சாஸ்திர ஆசிரியர் சொல்கிற ரசானுபவம் நமக்கு கும்ப சடங்கில் கிடைக்கிறது. ஒன்பது வகையான ரசங்களும் அதற்கு மேலதிகமாக ஊற்றுப்பெறும் ராசானுபவங்களும் கும்ப ஆட்டத்தில் காணலாம். இங்கு போலச் செய்தலின் மிக உச்சமான வெளிப்பாட்டுத் திறன் ஸ்ரனிஸ்லாஸ்கி சொல்வாரே பாத்திரங்களை வெளிப்படுத்தல் என்பது இங்கு கும்பவிழாவில் ஒரு ரசவாதமாக மாறி நம்மை பிரமிக்க வைக்கிறது. எத்தனை முகங்கள், எத்தனை பாவங்கள் மாறி மாறி வருகின்ற உணர்ச்சிப் பிரவாகம் எல்லாம் இங்கு கொட்டித் தீர்க்கப்படுகின்றன.

குரொட்டவ்ஸ்கியின் குரூர அரங்கிற்கான மூலத்தையும், மேயர்கோல்டின் உடற்பொறிமுறை அரங்கிற்கான ஆதாரங்களும், பெரக்டின் அன்னியமாதல் கோட்பாட்டையும், ஸ்ரனிஸ்லாஸ்கியின் பாத்திரமாதல் மரபையும், றிச்சட் செக்கனாரின் அனைத்தும் உட்கொண்ட அரங்கின் கூறுகளையும் நாம் இந்த கும்பவிழாவில் ஆடப்படும் ஆட்டத்தில் அவதானிக்க முடியும்.

அரங்கியல் வரலாற்றில் உருவான கோட்பாடுகள் சடங்குகளை அடிப்படையாகக் கொண்டே உருவாகின்றன. இரண்டு பிரதானமான விவாதங்கள் உள்ளன.

1) சடங்கிலிருந்து நாடகங்கள் உருவானது
2) சடங்கே நாடகம்.

இந்த இரண்டு கோட்பாடுகளும் ஒன்றையொன்று இணைத்த முறைமைதான் இங்கு சடங்கே நடனமாக மாறுவதை நாம் காணலாம். ஒரு பரதநாட்டிய அரங்கேற்றத்தில் நீங்கள் எத்தனை விதமான பாவங்களையும் ரசானுபவத்தையும் பெறுவீர்களோ அதற்கு அதிகமாகவே நீங்கள் கும்ப ஆட்டத்தில் காணமுடியும். சில இடங்களில் நரசிங்கராக ஆடுபவர்கள் நாக்கை நீட்டிக்கொண்டு கோர முகத்தை வெளிப்படுத்துகிறபோது எந்தவொரு நடிகனாலும் அத்தகைய பாவத்தைக் கொண்டுவர முடியாத அளவுக்கு கும்ப ஆட்ட முறைமை அமைந்திருக்கும்.

கும்ப விழாவை என் சிறுவயது தொடக்கம் பக்கத்திலிருந்து பார்த்து ரசித்தவன் என்ற வகையிலும் பின்னாட்களில் இவற்றை அறிவியல் ரீதியாக எப்படிப் பார்க்கலாம் என்ற வகையிலும் எனக்கு மேலைத்தேய, கீழைத்தேய கலை மரபு கோட்பாடுகள் துணை நிற்கின்றன. ஒன்றை நாம் எப்படிப் பார்க்கின்றோம் என்ற வகையில்தான் அதன் தன்மை நமக்குள் வெளிப்படும்.அதன் உள்ளிருந்து பார்ப்பவர்களுக்கு ஒரு சடங்காக பக்தி அனுபவமாக இருக்க, வெளியிலிருந்து ரசிப்பவர்களுக்கு அது ஒரு கலையாக உணரப்படுகிறது.

கும்பவிழா ஒரு தெரப்பியாகவும் தொழிற்படுகிறது. வருசம் முழுவதும் தங்களுக்குள் அடக்கி வைத்திருக்கும் கோபம், சந்தோசம், துக்கம், வெப்பிசாரம் என எல்லா உணர்வுகளையும் வெளிப்படுத்தும் ஒரு களமாகவும் இவை அமைகிறது. இங்கு ஆடுபவர்கள் அந்த நிலையை பெறுகிற போது பார்ப்பவர்களுக்கு அதனுள் சென்று அந்த அனுபவத்தைச் சுவைக்கிறார்கள். மன அழுத்தங்களுக்கு மருந்தாக இவை மாறுவதை நாம் இங்கு அவதானிக்க முடியும்.

திருகோணமலை மாவட்டத்தின் தனித்துவமான பண்பாட்டு அடையாளமாக நாம் இங்கு கும்ப விழாவைப் பார்க்க முடியும். ஒரு நடன ஆசிரியர் திருகோணமலையில் இந்த கும்ப நடனத்தை மேடையில் தன் பிள்ளைகளைக் கொண்டு நிகழ்த்தியிருந்தார்.ஆனாலும் அவை ஒரு முக்கியமான மடைமாற்றம் தனியே ஒரு சடங்கு முறைக்குள் அடங்கிப் போகாமல், இதனை நாம் ஒரு கலையாகவும் அடையாளப்படுத்த வேண்டும்.

# ஆபத்தாக மாறியுள்ள சாய்ந்தமருதின் வீதி!

## உடனடித் தீர்வை ஆதம்பாவா எம்.பி. பெற்றுத்தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை



**(நூருல் ஹுதா உமர் )**

கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட சுனாமி வீட்டுத் திட்டங்கள் அமைந்துள்ள சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் உள்ள மக்களின் பிரதான பாதை மண்சரிவில் சிக்கி அபாய நிலையில் உள்ளது. இது தொடர்பில் பல தடவைகள் உரிய அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் அறிவித்தும் பயனில்லை என்று அந்தப் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

அரச நிறுவனங்கள் அமுல்படுத்தும் வழமையான வேலைத் திட்டங்களுக்கு தனது பெயரை வைக்க முந்தியடிக்கும் அரசியல்வாதிகள் இந்த பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முன்வராமை அவர்களின் இயலாமையை காட்டுகிறது என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பெண்கள் மதரஸா, கலாசார மண்டபம், பள்ளிவாசல், பொது விளையாட்டு மைதானம், பல்வேறு அரச காரியாலயங்கள், முக்கிய திணைக்களங்கள், பொது மக்கள் செறிந்து வாழும் குடியிருப்பு ஆகியன உள்ள இந்த பிரதேசத்தின் பிரதான பாதை முற்றாக சிதைவடைந்து பாவனைக்கு ஆபத்தாக மாறியுள்ளது. இதனை சீரமைக்க பல்வேறு அரச காரியாலயங்களை மக்கள் நாடியும் இதுவரை பொருத்தமான தீர்வு கிட்டவில்லை.

இந்தப் பிரச்சினையை உடனடியாகக் கவனத்தில் கொண்டு தீர்வைப் பெற்றுத் தருமாறு தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும், சாய்ந்தமருது பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான ஏ. ஆதம்பாவாவிடமும் உரிய அதிகாரிகளிடமும் மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.



# உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் அதிபர் ஜானகி கிருஸ்ணபிள்ளை!

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக செல்வி ஜானகி கிருஸ்ணபிள்ளை நேற்று (24) புதன் கிழமை தனது கடமையைப் பொறுப் பேற்றுள்ளார்.

பருத்தித்துறை சென். தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிய இவர் நேற்று புதன்கிழமை முதல் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.



# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வாக மகாபாரதத் தொடர் அருளுரை நாளை!

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகளின் தலைமையில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக, ஆன்மீக அருளுரையாக மகாபாரதம் என்ற தொடர் சொற்பொழிவு நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

ஆசிரியர் இரா.செல்வவடிவேல் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார்.

நாளை (26) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணி தொடக்கம் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

# சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ் ம.வி. மாணவர்களது நாடாளுமன்ற அமர்வு









**(நூருல் ஹுதா உமர் )**

கல்வி அமைச்சின் 03- 2019 சுற்றறிக்கைக்கு இணங்க, கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலய மாணவர்களின் ஜனநாயக விழிப்புணர்வையும் தலைமைத்துவத் திறன்களையும் மேம்படுத்தும் நோக்கில், மூன்றாவது மாணவர் நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நேற்று (24) பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

ஏனைய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் பங்கெடுப்புடன் நடைபெற்ற இந்த மூன்றாவது மாணவர் நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வை சபைச் செயலாளரும், அதிபருமான எம்.சி.எப். நஸ்லின் ரிப்கா அன்ஸார் உத்தியோகபூர்வமாகத் தொடக்கி வைத்தார்.

இந்த அமர்வில் மாணவர் நாடாளுமன்றத் தலைவர் (சபாநயகர்), பிரதமர், அமைச்சர்கள், சபை பிரதானிகள், உறுப்பினர்களும் தங்கள் பொறுப்புகளை உணர்வுடன் நிறைவேற்றினர். கல்வி, விளையாட்டு, கலாச்சாரம், சமூக சேவை, ஒழுக்கம் உள்ளிட்ட பல துறைகள் தொடர்பான கருத்துக்களும் முன்மொழிவுகளும் மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களால் விவாதிக்கப்பட்டன.

அமர்வில் கலந்து கொண்ட அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர்கள் மாணவர்களின் ஜனநாயக பங்களிப்பு மற்றும் பொறுப்புணர்வைப் பாராட்டி, எதிர்காலத் தலைமைத்துவ வளர்ச்சிக்கு இது போன்ற நிகழ்வுகள் முக்கிய பங்காற்றுவதாகத் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வு, மாணவர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம், ஒருங்கிணைந்த செயல் திறன், ஜனநாயக மரபுகள் ஆகியவற்றை அனுபவ பூர்வமாகக் கற்றுத் தரும் வகையில் அர்த்தமிக்க ஒரு தளமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

# அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளை வசதியானவை என வெளியான சுற்று நிருபம்

## மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர் ஆசிரியர்கள், அதிபர்கள்

அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளாக இயங்கிவந்தபாடசாலைகள் கல்வி அமைச்சால் வெளியிடப்பட்ட புதிய சுற்று நிருபத்தின் பிரகாரம் கஷ்ட மற்றும் வசதியுள்ள பாடசாலைகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதனால் அங்கு கடமையாற்றும் ஆசிரியர்கள், அதிபர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

கல்வி அமைச்சால் பாடசாலைகள் வகைப்படுத்தி புதிய சுற்று நிருபத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வடக்கு மாகாணத்தில் 97 பாடசாலைகள் அதிகஷ்டப் பாடசாலைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்தில் ஆறு பாடசாலைகள் மட்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தீவக கல்வி வலயத்தில் இதுவரை காலமும் அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளாக இயங்கியவற்றில் நெடுந்தீவு மங்கையர்கரசி வித்தியாலயம் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் அனலைதீவு, நயினாதீவு, எழுவைதீவு, புங்குடுதீவு, வேலணை போன்ற இடங்களில் உள்ள பாடசாலைகள் கஷ்ட மற்றும் வசதியான பாடசாலைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் உள்ள 13 கல்வி வலயங்களில் யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் கல்வி வலயங்களில் எந்தவொரு பாடசாலையும் தெரிவு செய்யப்படவில்லை.

வடமராட்சி கல்வி வலயத்தில் கேவில் அ. த. க. பாடசாலையும் தென்மராட்சி கல்வி வலயத்தில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம், மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம், எழுதுமட்டுவாழ் அ. த.க. பாடசாலை , கைதடி நாவற்குழி அ. த. க. பாடசாலை ஆகிய நான்கு பாடசாலைகளும் மடு கல்வி வலயத்தில் 3 பாடசாலைகளும் மன்னார் கல்வி வலயத்தில் 7 பாடசாலைகளும் வவுனியா வடக்கு வலயத்தில் 27 பாடசாலைகளும் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 17 பாடசாலைகளும் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 3 பாடசாலைகளும் துணுக்காய் கல்வி வலயத்தில் 18 பாடசாலைகளும் கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தில் 4 பாடசாலைகளும் கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் 17 பாடசாலைகளுமாக வடக்கு மாகாணத்தில் 97 பாடசாலைகள் மட்டும் அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

# த.வெ.க. தலைவர் விஜய்யின் வெறுப்பு அரசியல் எடுபடாது



## திருமாவளவன் கருத்து

த.வெ.க. தலைவர் விஜய் செய்யும் வெறுப்பு அரசியல் மக்களிடம் எடுபடாது என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"பொதுக் கூட்டம், மாநாடு என வழக்கமான அரசியலைத்தான் த.வெ.க. தலைவர் விஜய் செய்கிறார். கூட்டணியில் இருந்தாலும் பொலிஸார் எங்களுக்கு விதிக்கும் வழக்கமான நிபந்தனைகள்தான் அவருக்கும் விதிக்கப்படுகின்றன. வேறு எந்த வகையிலும் அரசோ, பொலிஸோ அவருக்கு நெருக்கடி தருவதாக எனக்குத் தெரியவில்லை.

தி.மு.க. எதிர்ப்பு என்பதைவிட, தி.மு.க. வெறுப்பை விஜய் அரசியலாக பேசிக் கொண்டிருக்கிறார். எதிர்ப்பு என்பது வேறு; வெறுப்பு என்பது வேறு. தான் என்ன செய்யப் போகிறோம் என்பது குறித்த அவர் இது வரை பேசியதாகத் தெரியவில்லை. வெறுப்பு அரசியல் மக்களிடம் எடுபடாது. செயல் திட்டங்கள் எதிர்கால களப்பணிகள் ஆகியவை குறித்து விஜய் என்ன பேசுவார் என்ற எதிர்பார்ப்பே மக்களிடத்தில் இருக்கிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை உச்சத்தில் இருந்தபோது, விஜய் வாய் திறந்து எதுவும் பேசியதாகத் தெரியவில்லை. ஆனால், இன்றைக்கு இலங்கைத் தமிழர்கள் மீது பரிதாபம் காட்டும் முயற்சி வெறும் அரசியலுக்கானது என்றுதான் கருத வேண்டியுள்ளது." என்று தெரிவித்துள்ளார்.

# விஜய்க்கு அடிப்படை அரசியலே தெரியவில்லை என்கிறார் சீமான்

"த.வெ.கவினர் சின்ன பிள்ளைகள். ஒரு கருத்தை கருத்தாக அவர்களால் எடுத்துக்கொள்ள முடியவில்லை. விஜய்க்கு அடிப்படை அரசியலே தெரியவில்லை."

- இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"என்னை த.வெ.கவினர் தொடர்ச்சியாக விமர்சிப்பதை பார்த்து ரசித்து விட்டு செல்ல வேண்டியதுதான். த.வெ.கவினர் சின்ன பிள்ளைகள். ஒரு கருத்தை கருத்தாக அவர்களால் எடுத்துக்கொள்ள முடியவில்லை. அவர்கள் பக்குவப்பட வேண்டும். பா.ஜ.க. கொள்கை எதிரி, தி.மு.க. அரசியல் எதிரி என த.வெ.க. தலைவர் விஜய் சொல்கிறார்.

கொள்கைக்கும், அரசியலுக்கும் என்ன வேறுபாடு? எனில், தி.மு.கவின் கொள்கையில் த.வெ.கவுக்கு உடன்பாடு இருக்கிறதா, பா.ஜ.கவின் அரசியல் செயல்பாடுகளில் விஜய்க்கு உடன்பாடு இருக்கிறதா? பா.ஜ.க. கொள்கை எதிரி என்றால், த.வெ.கவுக்கு காங்கிரஸ் கட்சி கொள்கை நண்பனா? பா.ஜ.கவின் கொள்கைக்கும், காங்கிரஸ் கட்சியின் கொள்கைக்கும் உள்ள வேறுபாட்டை சொல்ல முடியுமா?

பா.ஜ.கவுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் ஒரே கொள்கைதான். கொடியில் வண்ணம் மாறும். ஆனால், கொள்கையில் எண்ணம் மாறாது. அதேதான் தி.மு.கவுக்கும், அ.தி.மு.கவுக்கும். மதச் சார்பற்ற சமூக நீதி என்கிறார்கள். எனில், அவரது ஆட்சியில் இஸ்லாமியர்களுக்கு இடஒதுக்கீடு இருக்குமா? மாநாட்டில் சாதி, மதம், மொழி, இனம் என பிரிக்கிறார்கள் என்று சொல்கிறார். மொழி, இனம் என்று சொல்லும்போதே விஜய்க்கு அடிப்படை அரசியலே தெரியவில்லை என்பது தீர்மானமாகிறது.



உலகம் முழுவதும் மொழியின் அடிப்படையில்தான் அனைத்து கட்சிகளும் அரசியலை செய்கின்றன.

நாகப்பட்டினத்தில் மீனவர்கள், இலங்கைத் தமிழர்கள் பற்றி திடீரென பேசுகிறார். அவர் பேசுவது, பிரதமர் மோடி தமிழ் பேசுவதை போல் உள்ளது. ஆத்மார்த்தமாக இதயத்தில் வலி இருந்தால் இவர்களை பற்றிய பேச்சு விஜய்யின் முதல் மாநாட்டிலே வந்திருக்கும். இதையெல்லாம் கேட்டால் விஜய்யை நான் விமர்சிப்பதாக சொல்கின்றனர். பொதுத் தளத்துக்கு வந்த பிறகு, மாற்றுக் கருத்துகள் என்பது எழத்தான் செய்யும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# தமிழகத்தின் துணை முதல்வர் பதவியை திருமாவளவனுக்கு வழங்க வேண்டும்



## தமிழிசை தெரிவிப்பு

சமூக நீதியை முதல்வர் ஸ்டாலின் பின்பற்றுகிறார் என்றால், வி.சி.க. தலைவர் திருமாவளவனுக்கு துணை முதல்வர் பதவி வழங்க வேண்டும் என பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்தார்.

சென்னையில் அவர் இன்று செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் ,

"அ.தி.மு.க, பா.ஜ.கவை பற்றியே பேசிக் கொண்டிருக்கும் தி.மு.க .அரசு, மக்கள் பிரச்சினையைப் பற்றி கவலைப்படுவதில்லை.

மதுரை அருகே விடுதி ஒன்றில் 14 வயது மாணவரை நிர்வாணப்படுத்தி சக மாணவர்களே கொடூரத் தாக்குதல் நடத்தி உள்ளனர். இதேபோல் திருச்சி அருகே பாதாளச் சாக்கடை அடைப்பை சரி செய்து கொண்டிருந்த 2 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தியாவிலேயே பாதாளச் சாக்கடை சுத்தம் செய்வதில் அதிகமான உயிரிழப்பு, தமிழகத்தில்தான் நடைபெறுகிறது.

அதேபோல், சமூக நீதியைப் பற்றி பேசும் தமிழக அரசு, கொரோனா காலத்தில் பணிபுரிந்த தாதியர்களுக்கு, அவர்கள் கேட்கும் சம்பளத்தை கொடுக்க மனம் இல்லாமல், உச்ச நீதிமன்றம் சென்றது. அதேநேரம், உச்ச நீதிமன்றமோ, 'இலவசங்கள், விளம்பரங்கள் செய்வதற்குப் பணம் இருக்கிறது. செவிலியர்களுக்கு ஊதியம் கொடுக்க பணம் இல்லையா?' என கேள்வி கேட்டு, தமிழக அரசுக்கு குட்டு வைத்திருக்கிறது.

மக்களுக்கு மத்திய அரசு எந்த நல்லது செய்தாலும், தி.மு.கவுக்குப் பிடிப்பதில்லை. சமூக நீதியை முதல்வர் ஸ்டாலின் பின்பற்றுகிறார் என்றால், மீதம் இருக்கும் 6 மாதத்துக்கு துணை முதல்வர் பதவியை திருமாவளவனுக்கு அவர் வழங்க வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.






# இஸ்ரேலின் எய்லாட் நகர் மீது ஆளில்லா விமானத் தாக்குதல்

## பலர் காயம்

ஏமனிலிருந்து, இஸ்ரேலின் - எய்லாட் நகர் மீது, நடத்தப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதல்களில் 20 பேர் காயமடைந்தனர்.

இஸ்ரேலின் சுற்றுலா நகரமான எய்லாட்டில் உள்ள பல்பொருள் அங்காடி ஒன்றின் அருகே பொதுமக்களும், சுற்றுலாப் பயணிகளும் கூடியிருந்த பகுதியில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினர், சம்பவ இடத்துக்கு விரைந்து காயமடைந்தோரை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இந்த நிலையில் ஹவுதி கிளர்ச்சியாளர்களால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் எழுவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# அமைதிக்கான நோபல் பரிசு வேண்டுமானால் காசா போரை டொனால்ட் ட்ரம்ப் நிறுத்த வேண்டும்



## பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவிப்பு

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உண்மையிலேயே அமைதிக்கான நோபல் பரிசை வெல்ல விரும்பினால், அவர் காசாவில் நடைபெறும் போரை நிறுத்த வேண்டும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான் தெரிவித்துள்ளார்.

நேற்று ஒரு தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்த மேக்ரான்,

“காசாவில் போரை முடிவுக்குக் கொண்டுவர இஸ்ரேல் மீது அழுத்தம் கொடுக்கும் அதிகாரம் ட்ரம்ப்புக்கு மட்டுமே உள்ளது. இந்த மோதலில் ஏதாவது செய்யக்கூடிய ஒருவர் இருக்கிறார் என்றால், அவர் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மட்டுமே.

அவர் எங்களை விட இப்போரை நிறுத்த அதிகமாக செய்ய முடிவதற்கான காரணம் என்னவென்றால், காசாவில் போரை நடத்துவதற்கான ஆயுதங்களை நாங்கள் வழங்குவதில்லை, அமெரிக்காதான் வழங்குகிறது.

ஐ.நா. பொதுசபையில் நேற்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பேசுகையில், ‘எனக்கு அமைதி வேண்டும். ஏழு மோதல்களை நிறுத்தினேன்’ என மீண்டும் பேசியுள்ளார். அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வேண்டும் என்றால், காசாவில் நடக்கும் போரை நிறுத்தினால் மட்டுமே அமைதிக்கான நோபல் பரிசு சாத்தியமாகும்.” என்று மேக்ரான் தெரிவித்துள்ளார்.

கம்போடியா, இஸ்ரேல் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் போர் நிறுத்தங்களை உருவாக்கியதற்காக ட்ரம்ப்புக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வேண்டும் என பரிந்துரைத்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் நேற்று பேசிய ட்ரம்ப், பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதற்கான மேற்கத்திய நாடுகளின் நடவடிக்கைகளை நிராகரித்தார், அது ஹமாஸ் போராளிகளுக்கு ஒரு வெகுமதியாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

“காசாவில் போரை உடனடியாக நிறுத்த வேண்டும். அதற்கு உடனடியாக அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.” என்றும் அவர் கூறினார்.

கனடா முரசு
வியாழக்கிழமை | 25/09/2025

## அல்பெர்டாவில் சிறுவன் காணாமல்போயுள்ளார்



02



# ஆயுத கும்பல்களை கட்டுப்படுத்த ஹெய்டிக்கு கனடா அரசு நிதி உதவி

ஹெய்ட்டியில் ஆயுத கும்பல்களினால் மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்களை கட்படுத்தும் நோக்கில் கனடா நிதி உதவி வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹெய்டியில் அட்டூழியம் புரியும் ஆயுதக் கும்பல்களை கட்டுப்படுத்துவதற்காக, கனடா 60 மில்லியன் டொலர் நிதி உதவியை அறிவித்துள்ளது.

இதில் பெரும்பகுதி நிதி, ஐக்கிய நாடுகள் சபை அமெரிக்காவின் திட்டத்திற்கு ஆதரவு அளிப்பதன் ஊடகா வழங்கப்பட உள்ளது.

03

# கனடா பொலிஸாரின் சீருடையில் மாற்றம்




கனடாவின் பிரதான பொலிஸ் பிரிவான கனடா ராயல் மவுண்டெட் பொலிஸ் உத்தியோகத்தர்களின் சீருடையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது

கனடிய அதிகாரிகளின் சீருடையில் அடர் நீல நிற சட்டைகள் அறிமுகப்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரின்ஸ் எட்வர்ட் தீவில் எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் முதல் இந்த மாற்றம் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

03



# பழங்குடியின முன்னாள் தலைவர் மீது பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டு

கனடாவின் பழங்குடியின முன்னாள் தேசியத் தலைவர் மற்றும் பழங்குடியின உரிமை போராளி பில் (லாரி பிலிப்) ஃபாண்டெய்ன் மீது, 1970களில் ஒரு உயர்நிலைப் பள்ளி மாணவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார் என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மானிடோபா நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சிவில் வழக்கில், ஃபாண்டெய்ன், பள்ளி பயணத்தை ஏற்பாடு செய்து வழிநடத்தியபோது, தன் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி சிறுமியை பாலியல் குற்றத்திற்கு உட்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டு படி, பள்ளி நிர்வாகம் ஃபாண்டெய்னுக்கு வழங்கிய அதிகாரம் காரணமாக அவர் குடும்பத்தினரிடையே நம்பகமான நபராக மாறி, மாணவியுடன் தவறான உறவை பேணினார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஃபாண்டெய்ன் எப்போதும் தங்களின் பணியாளர் அல்லது பிரதிநிதி அல்ல என்றும், 1973இல் அவர் Sagkeeng பழங்குடியினத் தலைவராக இருந்தார் என கூறி, வழக்கை தள்ளுபடி செய்ய சாகிங் கல்வி நிர்வாகம் தனது பதிலில், கோரியுள்ளது.

பில் ஃபாண்டெய்ன், மானிடோபாவின் Sagkeeng First Nation பழங்குடியினத்தைச் சேர்ந்தவர். அவர் 1997-2000 மற்றும் 2003-2009 காலங்களில் ஏ.எப்.என். தேசியத் தலைவராக மூன்று தவணைகள் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அல்பெர்டாவில் சிறுவன் காணாமல்போயுள்ளான்

கனடாவின் அல்பெர்டா மாகாணத்தில் உள்ள க்ரவுஸ்நெட் பாஸ் Crowsnest Pass பகுதியில் வார இறுதியில் 5 வயது சிறுவன் காணாமல் போயுள்ளார்.

இந்த சிறுவனை கண்டுபிடிக்க பொலிஸார் மற்றும் மீட்புக் குழுக்கள் தொடர்ந்து தேடிவருகின்றன.

டேரியஸ் மக்டகல் என்ற சிறுவனே காணாமல் போயுள்ளார், அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணியளவில் காணாமல் போனார் என முறைப்பாடு செய்யப்பட்டது.

சிறுவன் தனது குடும்பத்தினருடன் ஐலண்ட் லேக் கேம்ப்கிரவுண்ட் அருகே முகாமிட்டிருந்தார்.

அங்கிருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்தில், சகோதரர்கள் ஆறுபேருடன் சிறிது தூரம் நடந்து சென்றபோது குழுவிலிருந்து பிரிந்துவிட்டார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

டேரியஸ் திரும்ப வராததை கவனித்த குடும்பம் முதலில் தாங்களே தேடியபின் 911 இலக்கத்துக்கு அழைத்தனர். உடனடியாக தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கை தொடங்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல ஆறுகள், ஓடைகள் காணப்படுவதனால் தேடுதல் சிக்கலானது



என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தேடுதலில் அல்பெர்டா மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலங்களில் இருந்து வந்த தேடுதல் மற்றும் மீட்பு குழுக்கள், ட்ரோன்கள்), நாய்கள் மற்றும் ஹெலிக்கொப்டர்கள் பயன் படுத்தப்படுகின்றன.




# குழந்தையை கடத்த முயன்ற சந்தேக நபர் ஒருவர் கைது

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் உள்ள நியூ லிஸ்கார்ட் பகுதியில் ஆறு வயதான குழந்தையை கடத்த முயற்சித்த குற்றச்சாட்டில் 27 வயதான ஒருவரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கடந்த வார இறுதியில் நடந்த சம்பவம் தொடர்பாக ஒருவர், குழந்தை கடத்தல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

செப்டம்பர் 21 மதியம் 2.45 மணியளவில், நகர மையத்தில் உள்ள ஒரு இல்லத்தில் இருந்து குழந்தை காணாமல் போனதாக ஒன்டாரியோ மாகாண பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணையில், குற்றச்சாட்டுக் குட்பட்ட நபர் அந்த இல்லத்தில் உள்ள குழந்தையுடன் தொடர்பு கொண்டு, பின்னர் அந்தக் குழந்தை அவருடன் அருகிலுள்ள பூங்காவிற்கு சென்றமை தெரியவந்துள்ளது.

இதனை அவதானித்த ஒருவர் குழந்தையை கண்டுபிடித்து பாதிப்பின்றி குடும்பத்திடம் ஒப்படைத்தார்.

அதே நேரத்தில், சந்தேகநபர் பூங்கா அருகே கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பிறகு, அவர் ஒரு பொலிஸ் அதிகாரியைத் தாக்கியதில், அந்த அதிகாரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி அதிகாரிக்கு உயிர் ஆபத்தில்லாத காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றார் என தெரிவிக்கப்படுகின்றது.

## ஆயுத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய நாங்கள் இணைந்து செயல்பட வேண்டும் என கனடா வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க் ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் ஹெய்டி வெளியுறவு அமைச்சரை சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2021 முதல் ஹெய்டி கடும் வன்முறை மற்றும் அரசியல் குழப்பத்தில் சிக்கியுள்ளது. ஆயுதக் கும்பல்கள் நாட்டின் பெரும் பகுதியை கட்டுப்படுத்தி வருகின்றன.

## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் எதிர்வரும் 18 மாதங்களில் நாடு முழுவதும் படிப்படியாக இந்த சீருடை அறிமுகம் செய்யப்பட உள்ளது.

30 ஆண்டுகளில் முதன்முறையாக இந்த சீருடை மாற்றம் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

நவீன காலத்துக்கு ஏற்ற முறையில் இந்த சீருடை மாற்றம் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

முந்தைய சாம்பல் நிற சட்டைகளுக்குப் பதிலாக, புதிய சட்டைகள் மேம்பட்ட, நவீன பொருள்களால் தயாரிக்கப்பட்டவை என்பதால் அதிக வசதியையும், பல்வேறு சூழல்களில் தழுவி அணியக்கூடிய தன்மையையும் வழங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பெண்களுக்கான சிறப்பு வடிவமைப்பும் இதில் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சீருடை மாற்றத்தின் போது மக்கள் மத்தியில் சில குழப்பங்கள் ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக புதிய மற்றும் பழைய சீருடைகளுடன் பொலிஸார் கடமையில் ஈடுபடுவார்கள் எனவும் போலி சீருடையில் எவரேனும் மோசடிகளில் ஈடுபடுவதாக சந்தேகம் எழுந்தால் அவ்வாறானவர்களிடம் அடையாள அட்டையை மக்கள் கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.